163
Acc. No. 18462

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 5.] ராக்ஷஸ௵ ஆனி௴ [ஸஞ்சிகை 5.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

**பாளையங்கோட்டை சைவஸங்கம்.**

பாளையங்கோட்டையில் சைவஸபை யொன்றிருக்கின்றதாம். அதனால் கூட்டப்பட்ட ஒரு சைவ ஸங்கம் ஜூன் மாஸம் 19-ம் தேதி அவ்வூர் ஹிந்துகலாசாலை முன்னால் கூடியதாம். ஸோமஸுந்தரம் பிள்ளை யென்றொருவர் ஸங்கத்தினர்க்கு நல்வரவு அளித்தனராம். உத்தம பாளையவாஸியான, டி. ஸுப்ரஹ்மண்ய முதலியார் என்பவர் ஸங்காத்யக்ஷராய் வரிக்கப்பட்டாராம். அவர் தொண்டைமண்டலம் வேளாளராம். அவர் ஐரோப்பாவுக்குப் போயினராம். அதனால் அவர்க்கோர் ஏற்றம் உண்டாயதாம். தேவாரம் பாடியபின், ஸங்கத்தின் வ்யாபாரங்களைத் தொடங்கினராம். சைவ ஸபை முப்பது வருஷங்களுக்கு முன் ஏற்பட்டதாம். த்ராவிட பாஷையில் பயிற்சியும், தர்மஸொத்துக்களின் ஸரியான பரிபாலநமும், த்ராவிட மதத்தில் ஜநங்களுக்கு விஶ்வாஸத்தை யுண்டுபண்ணுவதும், இந்த விஷயங்களை நிறைவேற்றும் முறைகளைக் காட்டுவதும், அந்த

ஸபையின்கருத்துகளாம். அக்ராஸநாதிபதியின் உபந்யாஸத்தை நோக்கினல், பூர்வம் ஹிந்துக்களில் ஜாதிபேதங்கள் இல்லையென்றும், நிஷ்கர்ஷிக்கக்கூடாத காரணங்களையிட்டு, ஆரியர் முதலில் ஜாதிபேதங்களை யுண்டாக்கினரென்றும், அநேக நூற்ருண்டுகளின் அநுபவத்தால் ஜாதியென்பது ஒரு பெரிய தீங்கென்பதும், தேசத்தின் வ்ருத்தியை அது தடுக்கிறதென்பதும் விளங்குகின்றதென்றும், படிப்பால் தான் ஜாதியெனும் கேட்டை வேர்பிடுங்கலாமென்றும், அந்த முடிவைச் சைவஸங்கம் ஸாதிக்கவேண்டுமென்றும், நன்னடத்தையும் தர்மமும் மதத்துக்கு ஆதாரங்களென்றும், பழையகாலத்து த்ராவிடர்க்குள் இக்குணங்கள் மிகவும் ப்ரகாசித்ததாகவும், தத்கால த்ராவிடரும் அவ்வண்ணமாக ஸங்கத்தார் முயலவேண்டுமென்றும், அவரது அபிப்ராயங்கள் வெளியிடப்பட்டன.

ஸங்கத்தவர் செய்த தீர்மாநங்கட்குள், ஹிந்துக்கள் ப்ரௌடையான பெண்கட்கு விவாஹம் செய்வதால், அது வ்யவஹாராநுகுணமாக விருக்குமோவென்று ஸந்தேஹம்' ஜநிப்பதால், ப்ரௌடா விவாஹ சட்டத்தை ஆமோதிக்கின்றனரென்பதும், உத்தரவாத மறியாத சில வைதிகப்ராஹ்மணர்கள், ஶாஸ்த்ரப்படி அவ்விவாஹம் நிஷித்த மென்பதை ஸங்கத்தவர்கள் நிரஸிக்கின்றனரென்பதும் விசேஷமாய் ப்ரகாசிக்கின்றன.

ஶாஸ்த்ரங்கள் ப்ரௌடா விவாஹத்தை நிஷேதிப்பது ஹிந்துக்களைக் குறித்ததன்று; ப்ராஹ்மணரைக் குறித்துத் தான் அந் நிஷேதம் விதிக்கப்பட்டது. சைவஸபையாரும், ஸங்கத்தாரும் ப்ராயேண சூத்ரரா யிருப்பாரென்று எண்ணுகின்ருேம். அவர்கள் ஜாதிபேதங்களை அழிக்க முயல்கின்ருரல்லவா ? சட்டமும் ப்ராஹ்மணரைப் பற்றித்தான் வேண்டப்பட்டதாக எண்ணுகின்ருேம். சைவஸங்கத்தார் ஏன் அதைப்பற்றி வ்ருதா ப்ரமம் கொண்டாரோ தெரியவில்லை. சட்டத்திற்கு உபகாரமான தீர்மாநங்கள் இவ்வண்ணம் பெருகுவதைச் சட்டஜநகர்கள் ஸந்தோஷித்தபோதிலும், ராஜாங்கத்தார், ஸம்பந்தமற்றவர்களுடைய தீர்மாநங்களைப் பாராட்டமாட்டாரென நம்புகின்ருேம்.

சிவன் ஆர்யதேவதை யென்றும், ஆகமங்களால் விஸ்தரித்த சைவஸமயம் ஆர்யநாட்டில் ஜநித்ததென்றும், நாம் எண்ணுகின்

ரேும். இந்த மதம் த்ராவிடநாட்டில் பெருகவே, சிவபக்தரான நாயன்மார்கள் செய்த ஸ்தோத்ரங்கள் த்ராவிடர்க்கென்றே உதவின. இவற்றை த்ராவிட சைவர் விச்'வஸித்து, அவற்றைக் கொண்டு சிவனை வழிபடுவதால் த்ராவிட சைவமென்று ஓர்மதம் உளதெனச் சொல்லக்கூடுமோ? ஆழ்வார்கள் செய்த ஸ்தோத்ரங்களால் த்ராவிட வைஷ்ணவமும் அவ்வண்ணம் தழைத்ததென்னலாம். இவ்வண்ணம் பெயர்கொள்ளும் ஸமயங்களில், ஆர்யரிடத்தும், அவர் ப்ரமாண க்ரந்தங்களிடமும், முதலில் உதாஸீநதையும், பின்னுல் அவிச்'வாஸமும், முடிவில் த்வேஷமும், பரம்பரையாக உண்டாவதைக் கண்ணுற்று, ப்ராஹ்மணரெனப்படுவோர் யோசிக்கத்தக்கவர். த்ராவிட சைவரும், த்ராவிட வைஷ்ணவரும் வர்ணுச்'ரமங்கட்கும், அவற்றின் தர்மங்கட்கும் விரோதிகளாய்ப் பரிணமிக்கின்றனர். இதற்கு ஆழ்வார்களும் நாயன்மார்களும், அவர்கள் செய்யுள்களும் இடங்கொடுக்கவில்லை. காலபேதம் இதற்கு எம்மட்டும் காரணமாகின்றதோ என்பதையும் யோசிக்கவேண்டும்.

சைவஸங்கத்தார் இனித் தாமதமின்றி, வேளாளரும், கைக்கோளரும், செட்டிகளும், கோனுன்களும், வண்ணுன்களும், குயவன்களும், அம்பட்டரும், நாகஸ்வரக்காரரும், கள்ளரும், மறவரும், சாணுர்களும், அகமுடையவரும், பள்ளிகளும், படையாச்சிகளும், கருணீகரும், தொட்டியரும், வேடரும், வில்லியரும், குறவரும், குருவிக்காரரும், நாயகரும், நட்டுவரும், துளுவரும், தோட்டக்காரரும், பள்ளரும், பறையர்களும், வள்ளுவரும், பணிசெய்பவர்களும், மற்றேரும், ஒன்றுகூடி, ஒருவர்க்கொருவர் பெண்களைக் கொடுக்கவும் வாங்கவும், ஸஹபோஜநமும் செய்யவும், வேண்டிய முயற்சிகளைத் தேடுவார்களென்று நம்புகின்றேம். இவருடன் கூடி யொன்றுபடச் சில பார்ப்பினரும் காத்துகொண்டிருக்கின்றனர் என்பது அவர்க்குத் தெரிந்த விஷயமே.

இப்படி யுண்டாகப் போகின்ற ஜநம் விப்ரத்வேஷத்தை விசேஷமாக வஹிக்குமென்பதை விப்ராபிமாநிகள் சிந்திக்கவேண்டும். அதற்கிருப்பிடம், தமிழ்நாடும் கேரளநாடுமாக ஏற்படும். ஆனல் ஜாதிக்ருதமான வழக்கங்களும், அபிமாநங்களும் எளிதில்

அழியமாட்டா. ஆர்யத்வேஷத்தால் மட்டும் த்ராவிடஜாதியார் என்பவர் ஐக்யத்தை அடையலர்ம். இதர அம்சங்களில் அவர்க்குள் ஐக்யம் ஸமீபகாலங்களில் உண்டாகுமென்று தோன்றவில்லை.

* * * * * *

**ஸர்வஇந்தியா ஹிந்துஸபை.**

ஸநாதநதர்ம ரக்ஷணர்த்தமாக ஆர்யாவர்த்தத்தில் ஸ்தாபிதமான ஹிந்து ஸபையைப் பற்றியும், இவ்வருஷம் அதன் முயற்சியால் ஹரித்வாரத்தில் நடந்த ஸங்கத்தைப் பற்றியும் பிரஸ்தாபித்திருக்கின்றோம். அதன் நிர்வாஹஸபைக்குக் காஸிம்பஜார் மஹாராஜா ஸர், மணீந்த்ர சந்த்ர நந்தி, எம்., ஏ., கெ., ஸி., ஐ., ஈ., எனும் ப்ரபு அத்யக்ஷ ஸ்தாநத்தை வஹித்தார். ஹாநரபில், பண்டிட் மதன்மோஹன் மாளவ்ய, ஸர். டாக்டர். அஸுதொஷ மூகர்ஜீ, எம். ஏ., டி. எல்., ஸர். குருதாஸ் பாநர்ஜீ, எம். ஏ., டி. எல்., பாபு மோடிலால் கோஸ், முதலிய பல கநவான்களும், அநேகம் மஹந்துக்களும், ஸ்வாமிகளும், அந்த ஸபையின் மெம்பர்களாகத் தெரியவருகின்றனர். இந்த ராஜதாநியின் மெம்பர்களின் ஸங்க்யை மிகவும் குறைந்திருக்கின்றது. டாக்டர். டி. எம். நாயர்., ப்ரொபஸர், ஸி. ஆர். டி. நாயுடு. பி. ஏ., இவ்விருவருடன் சென்னைமாநகர மெம்பர்கள் முடிவுறுகின்றனர். ராஜதாநி மெம்பர்கள், ராமநாதபுரம் கெ. சேஷாத்ரி அய்யரும், திருச்சினுப்பள்ளி, டி. வி. ஸாமிநாதய்யர், பி. ஏ., எல். டி., என்பவர்களேயாம். இப்படி ஸநாதநதர்ம ரக்ஷகர்கள் த்ராவிடநாட்டில் ஏற்பட்டாராகில், பாளையங்கோட்டை சைவ ஸபையாரும், சென்னை ஸோஷல் ரிபாரம் ஸபையாரும் கொண்ட கருத்துகள் ஸபலமாகக்கூடியவைகளே.

* * * * * *

**பகவத்கீதையைப்பற்றிய ஓர் ப்ரச்நம்.**

நம் நாட்டில் பெரிய உத்யோகம் செய்த ஸர் சந்தாவர்க்கர் என்பவர் 'லிடரரி ஜர்னல்' எனும் மாஸாந்த்ர பத்ரிகையில் எழுதுகின்றார். இங்கிலீஷ் படிக்கும் பிள்ளை யொருவன் தன்னை ஸ்ரீக்ருஷ்ணனைப்பற்றிக் கேட்டதாகவும், அப்பெயர் கொண்ட வ்யக்தி யொருவன் இருந்ததுண்டோ

வென்றும், கீதையில் கண்ட விஷயங்கள் நடந்ததுண்டோவென்றும், அச்சிறுவன் தன்னை வினவினதாகவும், இவ்வினாக்கட்கு நேர் மறுமொழியாகத் தானொன்றும் இயம்பாமல், அச்சிறுவனையே அவனுக்குள் கர்த்தவ்யாம்சங்களை த்யாகம் செய்ய ஏவுகின்ற புத்தி அர்ஜுனனென்றும், அவற்றைச் செய்யும்படிப் போதிப்பது க்ருஷ்ணனென்றும், அவ்வண்ணம் கீதையானது ஒவ்வொரு புருஷனுக்குள்ளும் தினந்தோறும் நடக்கும் விஷயமென்றும் ஸமாதானம் அளித்ததாகவும் எழுதியிருக்கின்றார்.

இப்படி யோசனைகள் செய்யக்கூடும். குருக்ஷேத்ரம் சரீரம். அதில் அந்தர்யாமியாக நிற்கும் ஈஶ்வரன் ஸ்ரீக்ருஷ்ணன்; ஜீவன் அர்ஜுனன். ஜீவனுக்கு ஹிதமாகப் பகவானால் கொடுக்கப்பட்ட அந்தரிந்த்ரியங்களுக்கும் பாஹ்யேந்த்ரியங்களுக்கும், அபிமானி தேவதைகள் இதர பாண்டவர்களும் அவர்க்கு அநுகூலர்களும்; காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் இவை துர்யோதநாதிகள். ஒவ்வொருவனுக்குள்ளும் இக்குணங்கட்கும் ஆத்மகுணங்கட்கும் நடக்கும் யுத்தம்தான் பாரதயுத்தம். லங்கை சரீரம்; அதைச் சுற்றிய கடல் ஸம்ஸாரம்; ராவணன் மநஸ்; அவன் பத்து சிரங்களும் மநோவசமாய் நிற்கும் பத்து இந்த்ரியங்கள். அவன் அநுகூலர்கள், காமம் முதலான துர்க்குணங்கள். ஸ்ரீராமன் அந்தர்யாமியான ஈஶ்வரன்; ஸீதை ஜீவன்; வாநரர்கள் இந்த்ரியாபிமானிகளாகிய தேவர்கள்; அவை விஷயாஸக்தங்களாய்ப் புருஷனைக் கெடுப்பதை ஸஹிக்காதவர்கள். ஸம்ஸார சக்ரத்திலகப்பட்டுக்கொண்டு தேஹமாகின்ற காராக்ருஹத்தில் அடைபட்டு, விஷயங்களுக்கும் இந்த்ரியங்களுக்கும் வஶமான மநஸ்ஸாகிற நிசாசரனால் தகையப்பட்டுத் தன் நாதனாகின்ற பரமபுருஷனைத் தன் மீட்சி நிமித்தமாக த்யானிக்கும் ஜீவனுடைய ரக்ஷணார்த்தமாகப் பகவான், தேவர்களால் சூழப்பட்டுப் பாபக்ரியைகளில் ப்ரவ்ருத்தமான தன்னடியானுடைய மநஸ்ஸையும், அதற்கு ஸஹாயமாயுள்ள விஷயேந்த்ரியங்களையும் ஶமிப்பதுதான் ராமாயணம்.

இந்த ரூபமாக ஸர்வ இதிஹாஸங்களையும் கதைகளையும் அர்த்தம் செய்துவிடலாம். நம்முடைய பூர்வீகர்களும் இவ்விதம் யோசித்திருக்கின்றனர். இந்த யோசனைகளை ஒப்புக்கொண்டு, பகவானுடைய அவதாரங்களையும் திவ்ய சேஷ்டிதங்களையும் மித்யை

என்பார்க்கு அவை யாதொரு ப்ரயோஜநத்தையும் தாரா. பஞ்ச தந்த்ரகதையைக் கேட்டுப் பரமபுருஷார்த்தம் அடைவதுண்டோ?

> நாஹம் வேதைர் ந தபஸா ந தாநேந ந சேஜ்யயா ।
> சக்ய ஏவம்விதோ த்ரஷ்டும் த்ருஷ்டவாநஸி மாம் யதா ॥
> பக்த்யா த்வநந்யயா சக்ய அஹமேவம்விதோऽர்ஜுந ।
> ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப ॥

என்று, பகவான் கேவல கர்மங்களால் தனது ஸாக்ஷாத்காரம் கிடையாதென்றும், அநந்ய பக்தியொன்றினால் தான் தன்னை யறியவும் தர்சிக்கவும் அடையவும் கூடுமென் றருளிச்செய்தானன்றோ? அந்தப் பக்தியின் பரீவாஹமாகக் கர்மங்களை யநுஷ்டித்துத் தனக்கு அர்ப்பணம் செய்யவும் விதித்தான். ஒவ்வொரு புருஷனுடைய அந்த:கரணத்திலும் அவனது பூர்வகர்மம் பூர்வவாஸனை இவற்றின்படியே குத்ஸித யோசனைகளோ, அவற்றைத் தடுக்கின்ற ஸாதுயோசனைகளோ உண்டாகின்றன. இந்தக் குத்ஸித யோசனைகள் அர்ஜுநனுடையதோ? ஸாதுயோசனைகள் ஸ்ரீக்ருஷ்ணனுடையதோ? கர்மாநுகுணமாகப் புத்தி, மநஸ், இந்த்ரியங்கள் இவற்றை ப்ரவ்ருத்திக்கச் செய்வது ஈச்வரனுடைய சக்திதான். தான் அந்தர்யாமி யென்றும், ஸர்வ பாபநிவாரணத்வாரா மோக்ஷத்தை யடைய இச்சிப்பவன் தன்னைச் சரணமடைய வேண்டுமென்றும், பகவான் அர்ஜுநனுக்கு உரைத்ததையும், அதை விச்வஸித்து அவ்வண்ணம் எத்தனையோ கோடி ப்ரஜைகள் அநுஷ்டித்ததையும் பஞ்சதந்த்ரகதை யாக்கலாமோ? சந்தாவர்க்கர் பேச்சைக் கேட்டுச் சிறுவன் நடந்தானாகில் அவன் ஆத்மாவுக்குப் பகவானுடைய ஸாயுஜ்யம் கிடைக்குமோ?

திருவள்ளுவர் பொருளில்லார்க் கிவ்வுலகில்லை யென்றும் அருளில்லார்க்கு மேலுலகு இல்லை யென்றும் சொன்னார். சேஷத்வ ஜ்ஞாநத்துடன் பகவானிடம் பக்தி செய்யாதவனுக்கு அருள் உண்டாகாது. அருளைத் தேடினால் பொருள் கிடைக்காது. பொருளைத் தேடுவோர் அருளைத் தேடுவோர்க்கு ஆசார்யராக அமையக்கூடாது.

துலுக்கர் ஆர்யருடைய சரீரங்களைச் சேதித்தார்கள். தத்காலவித்யை ஆத்ம சௌர்யத்துக்கு ஹேதுவாகின்றது. ஈக்ஷத்

யதிகரணத்தில் ஸத்வித்யா விஷயமான ஸத்தென்பது ப்ரக்ருதியா, ப்ரஹ்மமா என்று ஸம்ஶயம் ஜநித்து, ஈக்ஷணம் அசேதந தர்மம் அன்றென்றும், ஸத்தை உபாஸிப்பவன் மோக்ஷமடைவன், அசேதநத்தைப்போல் ஹேய ஸ்வரூபத்தை அடையமாட்டானென்றும், உபநிஷத் சொல்வதால், ஸத் ப்ரஹ்மமே என்று ஸாதிக்கப்பட்டிருக்கிறது. கேவலம் பதார்த்த விமர்ஶையி லாழ்ந்தவர்கள், ப்ரக்ருதியைக் காட்டிலும் விலக்ஷண வஸ்துவின் அஸ்தித்வத்தைச் சிந்தியாமலும், சில காலம் அதன் இன்மையையும் ப்ராயேண கொண்டாடுகின்றன ராதலால், பரதசக்ரவர்த்தி, மான் குட்டியின் ஸ்மரணத்துடன் மரணமடைந்து, மாநகப் பிறந்தவண்ணம், அவர்களும் ஸதா அசேதந ஸ்மரணத்தால் மரணாநந்தரம் அசேதந துல்யமான புநர்ஜநநத்தை அடையவும் கூடும்.

அன்றியும் கிறிஸ்தவரான தத்கால வித்யா ப்ரேரகர்கள் 4500 வருஷத்துக்குமுன் நோவா என்பவனும் அவன் குடும்பமும் தவிர, மற்ற யாவத் ப்ரஜைகளும் நாசமடைந்ததாக நம்பி, அதற்குப் பகுகாலத்தின் பிறகு, ஆர்யசரித்ரம் ஆரம்பித்திருக்க வேண்டுமென்று ஸாதிக்கின்று ராகையால், ஆர்ய ராஜவம்சங்களை நம்புகின்றுரில்லை. அதை நம்பினுல், யூதர் மதக்ரந்தங்களில் விஶ்வாஸம் குறையவேண்டும். அவர் மதப்படி ஈஶ்வரன் யூதர் ஒருவர்க்கே உதவி செய்தான்: ஏனையோர்க்கு அவன் யாதொன்றும் செய்திலன். இந்த மோஹம் காலக்ரமேண குன்றியதாகிலும், அதன் பூர்வவாஸனை அத்யாபி அவரை விட்டதன்று. அவரும் அவருடைய அபிப்ராயங்களை ஆமோதித்த நம்மவர்களும், நமது நாட்டில் ஈஶ்வரன் அவதரித்ததையும், அவன் திவ்ய சேஷ்டிதங்களையும் மறுப்பதில் ஆஶ்சர்யமுளதோ ?

ராமாயண பாரதங்கள் சரித்ரமென எழுதப்படவில்லை யாகிலும், ஸமுதாயமாக அவற்றின் கதைகள் நம் நாட்டினர் நம்பக் கூடியவையே. அக்காலம் நம் நாட்டினர்க்கு எழுத்தே தெரியாதென்பாரு முளர். ஈஶ்வரன் அவதரணம் செய்கின்றுன் எனும் நம்பிக்கை, முதலில் ஆர்யநாட்டில் உண்டாய தென்பதை நம்பாத மதியீனன், இக்காலம் இருப்பனெனத் தோன்றவில்லை. இந்த விஶ்வாஸம் விசேஷமாக ஸ்ரீராமனிடமும் ஸ்ரீக்ருஷ்ணனிடமும் ஜநித்ததற்குக் காரணம், அது வாஸ்தவமா யிராவிட்டால், ஸரியாக

ஏற்படாதென்பதை முன்னமே வெளியிட்டிருக்கின்றோம். அவதாரம் வாஸ்தவமில்லையாயினும், அந்த விச்வாஸத்தையிட்டு அந்த மஹா புருஷர்களிடம் ஈச்வரத்ருஷ்டி பண்ணுமவர்க்கு ஈச்வரன் க்ருபை பண்ணுவானென்பதில் ஸந்தேஹமில்லை. வீண் பிடிவாதம் செய்து, வாஸ்தவமாயுள்ள அவதாரங்களின் நிஷேதம் செய்யல் ஈச்வர நிக்ரஹ ஹேதுவானாலும் ஆகலாம்.

* * * * * *

ஐரோப்பவான்கள் ஹிந்துமதத்தைப் புகழ்தல்.

ஏப்ரல் மாஸம் 3-ம் தேதி மேய்ல் பேபரில் ஜர்மானியர் இந்தியா தேசத்தாரிடம் கொண்ட கௌரவத்தைப் பற்றி எழுதியிருக்கின்றது. மாக்ஸ் முல்லர், பால்ட்யூஸன் முதலான வித்வான்கள் இந்தியருடைய வேதாந்தத்தைப்பற்றியும், அவருடைய கல்வியைப் பற்றியும் விசேஷித்துப் புகழ்ந்திருக்கின்றனர். மாக்ஸ் முல்லர் என்பவர், க்ரீக்தேசத்தாரைப் பார்க்கிலும், ஐரோப்பாகண்டத்தில் மத்யகாலத்திலும், தத்காலத்திலும் பெருகிய தத்வவிமர்சிகளைப் பார்க்கிலும், ப்ராசீந இந்திய வேதாந்திகள் ஆத்மஜ்ஞாநத்தை விஸ்தாரமாக அறிந்தனரென்றும், தத்காலம் நாகரீகஸ்தாநங்களா யெண்ணப்படும் சந்தைக் கூட்டத்தை யொத்த ஐரோப்ய நகரங்களைக் காட்டிலும், இந்தியாவின் அரண்யங்களில் ஆத்மஸ்வரூப விமர்சநம் நன்கு செய்யப் பட்டதென்றும் சொல்லியிருக்கின்றார். பால்ட்யூஸன் என்பவர், 'ஸவா ஈய௦ கூதூா வுஹூ' எனும் உபநிஷத் வாக்யத்தைப் பற்றி, யோசிக்குமிடம், அந்த வாக்ய நிர்த்திஷ்டமான ஜீவப்ரஹ்ம ஐக்யமானது, உபநிஷத்துக்கும், அவற்றின் காலத்துக்கும், தேசத்துக்கும் அதிக்ரமித்த விசேஷமுடையதென்றும், அந்த விசேஷம் லோகத்தார் அனைவர்க்கும் யோசனைக்கெட்டாத குணம் கொடுப்பதென்றும், இனிவரும் காலமும், அக்காலத்தில் மனிதர் எந்தெந்த நூதநாம்சங்களைக் கண்டறியப்போகின்றார் என்பதும் நாமறியக் கூடாததாயினும், மேலெடுத்த உபநிஷதர்த்தத்தை அதிக்ரமித்து, அறியக்கூடிய தொன்றுமில்லையென்றும், அது சாச்வதமாக நிலைத்து நிற்குமென்றும், உபநிஷத் ருஷிகள்தான் அந்த நித்யமஹிமையை அடைந்தாரென்றும், ப்ரக்ருதிக்குள்ளும், ப்ராக்ருத விகாரங்களுக்குள்ளும், அந்தராத்மாவாக நிற்கும் விகாரமற்ற

ப்ரஹ்மத்தைத் தம் ஒவ்வொருவர்க்குள்ளும், அவர் தான் கண்டனர் என்றும் சொல்லியிருக்கின்றார்.

ஷோபன்ஹாயர் என்பவர், லோகமெங்கும் உபநிஷத்தையொத்து நமக்கு ஹிதத்தையும் மேன்மையையும் தரவல்ல க்ரந்தங்களில்லை யென்றும், தான் ஜீவிக்கையிலும் தானிறக்கும்போதும் அவையே தனக்கு ஆச்'வாஸ ஹேதுவாக நிற்குமென்றும் வெளியிட்டனர்.

விக்டர் கூஸன் எனும் ப்ராஞ்சுதேசவித்வான், இந்திய தேசத்தாருடைய இதிஹாஸ நாடக காவ்ய க்ரந்தங்களையும், அவருடைய வேதாந்த க்ரந்தங்களையும் ச்'ரத்தையுடன் வாசித்தால், ஐரோப்யருடைய அல்ப ஸாமர்த்யம் வெளியாகின்றதென்றும், உயர்ந்த தத்வவிசாரங்களை நம் தேசத்தாரிடம் கண்டு, அவர் முன் தாம் பணியவேண்டுமென்றும் கூறினர்.

ப்ரெடரிக் ஷ்லீகல் எனும் ஜர்மானிய வித்வான், பரப்ரஹ்மத்தின் வாஸ்தவஜ்ஞானத்தை ப்ராசீந இந்தியர் அடைந்தனர் என்றும், அவரது க்ரந்தங்கள் தெளிவாயும், கம்பீரமாயும், மஹிமைபொருந்தியுமுள்ள வசநங்களால் பகவானை வர்ணித்திருக்கின்றனவென்றும், அவருடைய வேதாந்தமாகின்ற ஸூர்யன் முன், ஐரோப்யர் தத்வவிசாரம் ஓர் நெருப்பின் பொறிபோன்றதென்றும் உரைத்தனர். பகவத்கீதையைப் படித்துவிட்டு அந்த வித்வானே, அப்பெயர் தரித்த மற்றவரோ "ப்ராஹ்மணர்க்குள் ஆசார்ய பக்தி அத்யுத்க்ருஷ்ட தர்மமென மதிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால், ஓ அதிபரிசுத்தரான மஹர்ஷியே! பகவத்ஸ்வரூபத்தை ப்ரகாசிப்பிப்பவரே! உமது தெய்வீகமான வசநங்களால் மநஸுக்கு இன்னதென்று விவரிக்கமுடியாத ஒரு ஆநந்தத்தைத் தந்து, சா'ச்'வதமானவையும், ப்ரஹ்ம ஸம்பந்தமானவையுமான மஹாவிஷயங்களினிடம் அந்த மநஸைச் செலுத்துகின்ற இந்த க்ரந்தத்தைச் செய்தவரே! மர்த்யர்க்குள் முடிவாக உமக்கு எந்தப் பெயர் வாய்த்தாலும் ஸரி, நான் உம்மைப் பரமவஸ்துவென்று ஸம்புத்தி செய்கின்றேன்; எப்போதும் உமது அடிவைப்பை நோக்கித் தொடரக் குதூஹலிக்கின்றேன்" என்று மொழிந்தனர்.

வான் ஷ்ரோடர் எனும் ஜர்மானிய ப்ரோபஸர், 1899-ம் வருஷம், ஐரோப்யர்க்கு இந்தியர் மதத்தால் உண்டாகும் ப்ரயோஜனங்களைப்பற்றி உபந்யஸிக்கையில், 2500-வருஷங்களுக்கு முன்னிருந்த பைதாகொரஸ் எனும் க்ரீக்வித்வான், தமது தத்வநிர்ணயங்களை இந்தியரிடம் கற்றதாகவும், அவர் காலத்துக்குமுன்னமே யூக்ளிட் 47-வது ப்ராபஸிஷன் இந்தியர்க்குத் தெரிந்ததாகவும் உரைத்தனர்.

ஹம்போல்ட் எனும் ஜர்மானியர், தான் பகவத்கீதையைப் படிக்கும் வரையில் தனக்கு ஆயுஸ்ஸைக் கொடுத்த ஈச்வரனை ஸ்தோத்ரம் செய்கின்றனர். இன்னும் பல ஜர்மானியரும், அவர்க்குள் முடிவாக க்யாதியடைந்த நீசியென்பவரும் இந்தியருடைய வேதாந்தத்தைப்பற்றி மிகவும் பக்தியுடன் பேசுகின்றனர்.

தத்காலம் ஜர்மானியர் இந்தியருடன் யுத்தம் செய்கின்றனர். அவரை நாகரீக மற்றவரெனவும் சொல்கின்றனர். ஆனல் அவர் மனஸ்ஸானது வைரத்தால் தூஷிக்கப்படாதிருந்தக்கால், இந்தியர் மேன்மையை அவர் அறிந்தவண்ணம் யாரும் அறிந்திலர்.

* * * * * *

**நம் சிறுவர் ஸ்வதர்மங்களை த்யாகம் செய்யல்.**

இப்படிப் பூஜிக்கப்பட்ட நமது மதமானது இங்கிலீஷ் படிக்கும் இந்திய சிறுவரால் மதிக்கப்படாமல் போவதேன்? இது ஸம்ஸர்க்கதோஷம். ஸம்ஸர்க்கமும் ஜந்மாந்தர வாஸனையால் ஏற்படவேண்டும். இந்தியர்களுக்குக் கலாசாலைகளில் ஸாமாந்ய ஜ்ஞாநத்தைப் போதிப்பவர் ப்ராயேண பாதிரிமார்களும், இந்துமத வாஸனையற்ற ஐரோப்ய வாத்யார்களும், இவர்களிடம் கல்விகற்ற இந்தியருமே. ஹிந்துமதத்தைத் தெரிந்துகொண்டு அதைப் புகழ்கின்ற ஐரோப்ய வித்வான்களுடைய ஜ்ஞாநத்திலும், க்யாதியிலும் ஓர் லேலத்தையும் அடைந்திராதவர், இந்தியர்க்குக் கல்வி கற்பிப்பதும் தவிர, அவருடைய பூர்வ வித்யைகளையும் அநுஷ்டாநங்களையும் ஸதா நிந்தாஸ்தாநங்களாகக் கொண்டிருக்கின்றராதலால், அவரிடம் படிக்கும் இந்திய சிறுவரும் மோஹத்தை அடைய இடமுண்டாகின்றது. ஆசாரங்களை வேறுபடுத்த முயல்கின்ற ஸோஷல்ரிபாரம் ஸபையைச் சேர்ந்த ம-ா-ா-ஸ்ரீ. கே. பி. ராமநாதய்யர் என்பவர், ஏப்ரல்மீ

11வ தென் இந்தியன் ஸபையார் முன் உபந்யஸிக்குங்கால், "மதஸம்பந்தமான நிர்ணயங்களில் அவிச்வாஸம் வளர்கின்றமையால், ஜநங்கள் பரலோகங்களில் வைத்திருப்பதாய் எண்ணப்படும் நிதிகளின் பொருட்டு இவ்வுலகில் அநுபவிக்கக்கூடிய நன்மைகளை விட்டுவிட மனங்குறைந்திருக்க நேர்கின்றது" என்று சொன்னார். இது உண்மை. ப்ரியங்களைத் தேடி யநுபவிக்கும் ப்ரயத்நங்களில் ஆழ்ந்து, ஐரோப்பர் மதமென்பதை லோகஸங்க்ரஹத்துக்காக அங்கீகரித்தாலும், பரலோக ஸாதநமாக அதை வழிபடுவார்களில்லை. அவர் சிஷ்ர்களாய் இந்தியர்கள் ஆனபோது, 'குவாயடுவசு ஶிஷ்யா:' எனும் வசநம் நிருபிக்கப்படுகின்றது. இதனால் நம்மவர்க்குள் துராசாரங்களும், குவாஸனைகளும், குதர்க்கங்களும், அக்ருத்ய கரணங்களும், க்ருத்யவர்ஜநங்களும், பெரியோரிடம் நிந்தையும், ஸ்வதர்மங்களில் த்வேஷமும், ஸ்வமதத்தில் அவிச்வாஸமும், ஶரீராதி தௌர்பல்ய ஹேதுகங்களான அநுஷ்டாநங்களும், நூதநமான வ்யாதிகளும், வ்ருதா த்ரவ்ய வ்ரயங்களும், மநோவாக்காயங்களின் வ்ருத்தி பேதங்களும், நாளுக்கு நாள் வ்ருத்தியாய்க்கொண்டுவருகின்றன. ஆர்யர் இருப்பையே சரித்ரங்களால் அறியவேண்டிய காலமும் ஸமீபித்திருக்கின்றதென எண்ணுபவரும் உண்டு.

பாபு மோடிலால் கோஸ் உபந்யாஸம்.

வங்கதேசத்து ப்ரோவின்ஷல் ஸங்கத்தில் அக்ராஸ்தாநத்தை வஹித்த பாபு மோடிலால் கோஸ் என்பவர், "நமது கர்த்தவ்யங்களில் நாம் ஸாதிக்கக்கூடாததும், நம் முன்னோரால் ஸாதித்திராததும் ஒன்றுமில்லை யென்பதை நாம் மறக்கவொண்ணாது. * * * நம் முன்னோர் வ்யாஜ்யம் என்பதை அறிந்திலர். அதன் கேடுகளை வேரறுக்காவிட்டாலும், அதைக் குறைக்க நாம் சக்தரன்றோ? நமது ஸாதாரண வ்ருத்திகளில் நாம் த்ருப்தரானால், அந்யதேச ஸாமக்ரிகளின் ஆவஶ்யகத்தை த்யஜிக்கலாம். நமக்கு வேண்டிய வஸ்த்ரங்களனைத்தையும், நமக்கு வேண்டிய பாத்ரங்களையும், நகைகளையும், உப்பு முதலான ஸர்வ பதார்த்தங்களையும் முன்னால் நாமே மசயது கொள்ளவில்லையா? இவற்றையும், மற்றவைகளையும் நாம் ஏன மறுபடியும் செய்துகொள்ளக்கூடாது? மித வ்ரயத்துடன் பிழைக்

கும் விஷயத்தில், நம் முன்னோர், தமது சிறிய ஆஸ்திகளின் வரும் படியைக்கொண்டு, தமது ஸ்வதந்த்ர மிழக்காமலும், ஸுகமாக வும் பிழைக்கவில்லையா? ஐம்பது வருஷங்களுக்கு முன் அவர் செய்ததை யாம் இப்போது செய்யப் பொருந்தியதே. அவர்களுக் குக் கவர்ன்மெண்டு உத்யோகமில்லை: ஆயினும் ஸுகமாய் ஜீவித்த னர். அவர் ஸந்தோஷமாயும் த்ருப்தியாயும் இருந்தனர்; ஏனென் ருல், அதிவ்ரயமின்றியும், ஆரோக்யத்துடனும் அவர் பிழைத்த னர். நமது படித்த சிறுவர்கள், தம் முன்னோர் காட்டின வழியைத் தொடர்ந்தாரேல், அவர் யாதொரு உத்யோகத்துக்கும் போக வேண்டாம். இந்த ஸேவகாவ்ருத்தியானது ஆத்மகுணங்களுக்கு ஹாநியை நியமேந உண்டுபண்ணுகின்றது. முடிவாக, நமது தேசம் க்ஷேமப்படவேண்டுமாகில், நாம் வீண் வ்ரயமின்றிப் பிழைக்கவேண்டும்; நமது யோகக்ஷேமார்த்தம், நமக்குள்ள ஸாமக்ரிகளுடனும், நமக்கு ஸாத்யமான முயற்சிகளுடனும் தான், நாம் த்ருப்தராகவேண்டும்; அதாவது நமது ஆசாரங்களையும், வ்ரு த்திகளையும், கூடியமட்டும் நமது ஜாதிக்கொத்தபடி திருத்தவேண் டும். விலையுயர்ந்த கோட்டுகளையும், பூட்ஸ்களையும், சிலகாலம் டொப் பிகளையும் நாம் அணிவானேன்? நம் முன்னோர் பாதரக்ஷையின் றியும், கோட்டுகளற்றும், டொப்பிபோடாமலும், நம்மை விடப் பலிஷ்டராகவும் ரோகமற்றும் இருந்தார்களே!'' என்றிவ்வண்ணம் மொழிந்தனர். இதை இங்கிலீஷ் படித்தவர் யாவரும் ஒப்புக் கொள்ளமாட்டார். நடை, உடை, நம்பிக்கைகள், உண்டி, பாநம், உபந்யாஸம், கூட்டம், குமுதம், ஆட்டம், நாடகம், பாட்டு, படிப்பு, பாஷை, இவை பலவற்றுள்ளும் இங்கிலீஷ்காரரெனத் திருந்துவோர் பெருகுவார்கள் என்பதை யாம் நம்புகின்றோம். ஆகிலும், தொன்முறை மனத்தைத் துறவாநிற்பவர், பன்முறை யியம்பப் பழமை காப்பர், என்றிவை யாமிங்கெழுத வமைந்த தாம், கன்றுகுணிலாக் கனியுதிர்த்துகந்தோன், எண்ணியபடியே யாவுமியல்வன, புண்ணியம் உளதேல் புவிதனில் அவன்சொல், நின்றவனடியார் நினைவுறப் பெருகும், அன்றெனில் அவனி யகந் தையி லாழ்வதே!

# தத்வவிசாரம்.

## விபீஷண ஶரணாகதி.

ஶரணாகதியினுடைய ஸர்வாங்கங்களும் புஷ்கலமாய் ப்ரகாசிக்கும் விபீஷண ஶரணாகதியை நோக்குங்கால், விபீஷணன் ஸ்ரீராமனுடைய ஸாமீப்யத்தை யடைந்து, ஸுக்ரீவாதிகளைக் கண்டு, அவர்களுடன், 'த்யக்த்வா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச ராகவம் ஶரணம் கத:' ॥ 'ஸர்வலோகஶரண்யாய ராகவாய மஹாத்மநே। நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணமுபஸ்திதம்' ॥, "புத்ரர்களையும் பத்நீமார்களையும் த்யாகம் செய்துவிட்டு, ராகவனைச் சரணமடைகின்றேன். மஹாத்மாவும் ஸர்வலோகரக்ஷகனுமான ராகவனிடம், ஸமீபத்தில் நெருங்கிய விபீஷணனாகிய என்னைப்பற்றி விஜ்ஞாபநம் செய்யுங்கள்" என்று உரைத்தார். ஸ்வாமி ஸந்நிதியை அடைந்தபோதும், 'பவந்தம் ஸர்வபூதாநாம் ஶரண்யம் ஶரணம் கத:॥ பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச தநாநி ச। பவத்கதம் மே ராஜ்யம் ச ஜீவிதம் ச ஸுகாநி ச' ॥ "ஸர்வ ப்ராணிகளுக்கும் ரக்ஷகனான தேவரீரை நான் சரண மடைகின்றேன். லங்கையும், மித்ரர்களும், செல்வங்களும் என்னால் முற்றிலும் த்யாகம் செய்யப்பட்டன. இனி எனக்கு ராஜ்யமும் ஜீவநமும் ஸுகமும் தேவரீரைப் பொறுத்தன" என்று விஜ்ஞாபநம் செய்தார். ஸர்வலோக சரண்யத்வமும், ஸர்வபூத சரண்யத்வமும் பரமாத்மாவினுடைய அஸாதாரண லிங்கங்கள். ஸ்ரீராமனை மஹாத்மாவென்றதும், 'அஹம் வேத்மி மஹாத்மாநம் ராமம் ஸத்யபராக்ரமம்।' என்று, விஶ்வாமித்ரர் சொன்னவண்ணம் சொன்னபடி. "நானும்,

வஸிஷ்டரும், மற்ற தபோநிஷ்டர்களும், மஹாத்மாவான ஸ்ரீரா மனை உண்மையாக அறிவோம். அவன் பிதா வென்று நினைத்துக் கொண்டிருக்கும் நீ யறியாய்” என விச்வாமித்ரர் தசரதனுக்குச் சொன்னதால், தசரதன் தன் புத்ரனெனவும் ஓர் மநுஷ்யனெனவும் ராமசந்த்ரனை நினைத்தது மித்யை என்றும், அவனது அவதாரரஹஸ்யம் தபோநிஷ்டர்களுக்குத் தான் தெரியுமென்பதும் ஸ்பஷ்டமாகின்றது. இந்த விசேஷ ஜ்ஞாநம் விபீஷணனுக்கு உண்டு. ஸ்வாமியைப் பஞ்சவடியில் தர்சித்த காலத்தில், சூர்ப்பணகா, தன் ப்ராதாக்கள் வ்ருத்தாந்தங்களைச் சொல்லுமிடத்தே, மற்ற ராக்ஷஸர்களைக் காட்டிலும் விபீஷணன் விலக்ஷணன் என்பதை, 'விபீஷணஸ்து தர்மாத்மா ந து ராக்ஷஸ சேஷ்டித:'। எனும் ச்லோகத்தால் முன்னமே சொல்லி யிருக்கின்றாள். இந்த விஷயத்தை ஹநுமான், ராவணன் ஸதஸ்ஸில், தானே யறிந்து கொண்டார். ஸுக்ரீவன், விபீஷணன் விஷயத்தில் ஸம்சயப்படவே, ஹநுமான், அவருடைய சீலமறிந்தவராய், அவருடைய குணங்களை ஸ்வாமியினிடம் விஜ்ஞாபித்தனர். கைகஸீ எனும் ராவணாதிகள் மாதா, ஸ்வ பிதாவின் வேண்டுகோளின் பேரில், விச்ரவஸ் எனும் புலஸ்த்ய புத்ரரிடம் சென்று, தாருண வேளையில், புத்ர விஷயமான ப்ரார்த்தனையைச் செய்தாள். அந்த மஹர்ஷியும், அத்தகைய காலத்தில் அவள் ப்ரார்த்தித்த படியினால், 'தாருணாந் தாருணாகாராந் தாருணாபிஜந ப்ரியாந் । ப்ரஸவிஷ்யஸி ஸுச்ரோணி ராக்ஷஸாந் க்ரூரகர்மண:'॥ என்று சொன்னார். மறுபடி, அவள் அவரிடம் அப்படிப்பட்ட புத்ரர்களைத் தான் இச்சிக்கவில்லை யென்று வணங்கிக் கேட்கவும், 'பச்சிமோ யஸ்தவஸுதோ பவிஷ்யதி சுபாநநே । மம வம்சாநுரூபஸ்ஸ தர்மாத்மா நஸம்சய:'॥ என்று அநுக்ரஹித்தார். ஆதலாலன்றோ, அவருடைய கடைசி புத்ரனான விபீஷணன் ப்ரஜாபதி குல யோக்யராயும், தர்மாத்மாவாகவும் பிறந்தார். ஸ்ரீராமன் பரமாத்மாவென்றும், அவன் திருவடிகளில் கைங்கர்யத்தைப் பரமப்ராப்யமாக விபீஷணன் ஸம்பா

தித்துக் கொன்டானென்றும் அறிந்தவர்க்குத்தான், ப்ரஜாபதி குலார்ஹறதை எனும் பதங்களின் உண்மையான பொருள் விளங்கும். ஆதலால் பிதாவின் அநுக்ரஹத்தாலோ, தனது ப்ராசீந ஸுக்ருதத்தாலோ, ஸ்ரீராமன் ஸர்வேப்²வரன் என்பது விபீஷணனுக்குத் தெரியும். இன்னும், இவர் முன்பாகவே, ஹநுமான் ராவணனுடன், ‘[illegible]’ எனும் ப்²லோகத்தினல், ஸ்ரீராமன் ஸர்வ ஈப்²வரர்க்கும் பரமமான மஹேப்²வரன் என்பதைச் சொன்னரன்றோ? இப்படி யோசித்தால் தான், விபீஷணன் ஸ்ரீராமனே ஸர்வலோக ஸர்வபூத ஶரண்யன் என்று சொன்ன உண்மை வெளிப்படும். அவை கேவலம் பூஜார்த்தம் உரைத்த சொற்கள் அல்ல.

இப்படி விபீஷணன் பண்ணின ஶரணுகதி காமப்ரேரிதமென்று நினைப்பார் பலர். அந்த யோசனை ராமாயணத்தை ஸாதாரணமாகப் படிப்பவர்க்கு உண்டாகின்றது. ‘[illegible] ராஜ்யம்’ என்று ஸ்ரீராமன்முன் விபீஷணன் சொன்னரன்றோ? அவர் வரவைப்பற்றி ஹநுமானும், ‘ராஜ்யம் [illegible]’। “ராஜ்யத்தை ப்ரார்த்தித்தவராய்க்கொண்டு புத்திபூர்வமாக இங்கே வந்தார்” என்றுரைக்கவில்லையா? இன்னும் பகவானே ‘[illegible]’ என்று ஸுக்ரீவனுடன் சொல்லவில்லையா? மேலும் தன்னைச் சரணடைந்த விபீஷணனை நோக்கி, ‘[illegible]।’ [illegible]’॥ “நான் ராவணனை ப்ரஹஸ்தனுடனும் பந்துக்களுடனும் கொன்று, உன்னை ராஜாவாக்குகின்றேன்; இதை உனக்கு ஸத்யமாகச் சொல்கின்றேன்,” என்று பகவான் சொல்லவில்லையா? ஆதலால் விபீஷண சரணுகதி ராஜ்யார்த்தமென்பதில் ஸந்தேஹமுண்டோ என்று யோசனை செய்யத்தக்கதே.

ஆனால் ஸ்ரீரகுநாதன் அவதாரதசையில் ப்ராயேண தன் நிலையைப்பற்றிப் பரோக்ஷ ப்ரியனாய் நின்றான். அவன் உண்மை ஸீதைக்குத் தெரியும்; பரதலக்ஷ்மணர்க்குத் தெரியும்; ஹநுமானுக்கும் விபீஷணனுக்கும் தெரியும்; இன்னும் த்ரிஜடையும் தெரிந்து கொண்டாள். 'யஸ்ய விக்ரமமாஸாத்ய ராக்ஷஸா நிதநம் கதா:। தம் மந்யே ராகவம் வீரம் நாராயணமநாமயம்' ॥ "எவனுடைய பராக்ரமத்தை ஸமீபித்தவர்களாய்க்கொண்டு ராக்ஷஸர்கள் மரணமடைந்தார்களோ, அந்த வீரனான ராகவனைப் (பயக்ருத்) பயநாசகனான நாராயணனென்று நினைக்கின்றேன்", என்று ராவணனும் யோசித்தான். ஆயினும் வ்யவஹார தசையில் தன் ஸ்வரூப ப்ரகாசத்தில் பகவானுக்குத் திருவுள்ளமில்லை. ஆதலால், வ்யவஹாராநுகுணமாக ஸம்பாஷணைகளை அவனும் அவனது நிலையறிந்தோரும் செய்தாராகில், அவற்றில் விஸ்மய ஹேதுவில்லை. ஆனால் அவர்களுடைய ஸர்வோக்திகளும் அப்படிக்கில்லை. ஆதலால் தான் விமர்சிக்கத் தக்கவர் விஷய பராமர்சத்தை நன்கு பண்ணவேண்டும்.

முதலில், தன் வரவை ஸ்வாமியினிடம் விஜ்ஞாபிக்கக் கேட்டபோது, விபீஷணன் தனது தாரபுத்ராதிகளை த்யாகம் செய்துவிட்டு, ஸர்வலோகசரண்யனை யடைந்ததாகச் சொன்னார். மற்றோர் அபிப்ராயத்தை வெளியிட்டாரில்லை. ஸர்வலோக சரண்யனென்று ராமனைச் சொன்னபோது, எந்த ரூபமாகப் பகவானுக்கு அப்பெயர் பொருந்துமோ, அந்த ரூபமாகப் பகவானை எண்ணித்தான் அவனிடம் அவர் வந்தவர். தாரபுத்ராதி த்யாகம் முன்னமே செய்து விட்டாராகையால், பகவானிடம் ஐஹிக விஷயமாக யாதொன்றையும் அபேக்ஷித்திலர் என்பது ஸித்தம். ஸ்வாமியின் முன்பாகத் தனது ப்ரதமோக்திகளை வெளியிடுங்கால், 'பவந்தம் ஸர்வலோகாநாம் சரண்யம் சரணம் கத:', என்று சொன்னாரன்றோ? ஸர்வலோக சரண்யத்வம் பூமியின் ஏகதேசத்துக்கு அரசனாயிருப்பவன் விஷயமாக ப்ரசம்ஸா ரூபமாகச் சொல்

லக்கூடு மென்றாலும், ஸர்வபூத ப்ரரண்யத்வம் அவன் விஷயத்தில் முற்றிலும் பொருந்தாத ஸ்துதி. பகவானுடைய தத்வமான நிலையை யறிந்து ப்ரரணுகதி பண்ணின விபீஷணர், அதற்குப் பொருந்திய பலனை அபேக்ஷிப்பரேயன்றிப் பொருந்தாத ஐஹிக விஷயங்களையும் அபேக்ஷிப்பரோ? மேலும் 'வரிதஃஜா யோ ஜஂகா தி்ராணிவ யநாநிவ' । என்று சொன்னபடியால், அவர் அபேக்ஷித்தார் என்று சொல்லக்கூடிய லங்கையும் ஸம்யக் த்யாகம் செய்யப்பட்டதாயிற்றே. மித்ராணி என்பதால், எவர் நிமித்தம் ராஜ்யமும் செல்வமும் வேண்டப்படுமோ, அப்படிப்பட்ட பார்யை, மக்கள், பந்துக்கள் உள்பட பூர்வ மித்ரர்களனைவரும் த்யாகம் செய்யப்பட்டார்கள். அவர் ஸுக நிமித்தமாக அபேக்ஷிதங்களான பொருள்களும் யநாநி எனும் ஶப்தத்தால் த்யாகம் செய்யப்பட்டன. இப்படி, 'வதிஸுதா நுயஹாதரு வாஂய வாநு, ககிவிஂவ தெஹவரதாமதாஃ', என்று கோப கந்நிகைகள் பகவானிடம் சென்றவண்ணம், விபீஷணனும் ஸர்வஸங்க த்யாக பூர்வகமாக, ஸ்வாமியினிடம் ப்ரரணுகதி செய்தார். ஆனல் 'ஹவதஂ ஒ ராஜ்யஂவ ஜீவிதஂவ ஸுவாநிவ', என்று சொன்னரே, அதன் கருத்தென்ன வென்றால்: சொல்கின்றோம். முன் அவர்க்கு ராஜ்யம் இலது. லங்காராஜ்யம் ராவணனுடையது; இவருடையதன்று. ஆதலால் ராஜ்ய சப்தத்தால் முன்னிருந்ததைப் போக்கி, அதை ஸ்ரீராமனிடம் மறுபடியும் கேட்டபடி யெனத் தகாது. ராஜ்யம் என்றால், இவ்விடம் வாஸயோக்ய மான ப்ரதேசம் என்று சொன்னல் தான் பொருந்தும். முன், ராவணராஜ்யே வஸித்தவர், இப்போது ஸ்ரீராமராஜ்யே வாஸத்தை அபேக்ஷித்தார். ஜீவிதம் என்றதால், தன்னுயிரைப் பகவத் கைங்கர்யத்தில் கழிக்க அபேக்ஷித்தபடி. ஸுவாநி என்றதால், ஸமீபவாஸத்தாலும் கைங்கர்யத்தாலும் கிடைக்கும் ஸுகம் என்றபடி. இந்த யோசனைகளால் ராஜ்ய சப்தமும் கிஂகரகவாயி ராஜ்யஂ என்று பொருள் படலாம். இன்னும், "நானுன்னைச் சரணடைந்தேன்; பூர்வ ஸங்கங்களனைத்தையும் துறந்தேன்; இனி

எனக்கு ஆயுளோ, செல்வமோ, ஸுகமோ, எல்லாம் உன்னைப் பொறுத்தது," என்று சொல்வதால், பகவத் பாரதந்த்ரியத்தை அபேக்ஷித்ததாகுமே யன்றி, நப்ஂவரங்களை வேண்டியதாகமாட்டாது. முடிவில் ஸுக்ரீவன் பகவானிடம் ப்ரார்த்தித்த 'தஸ்யாச க்ஷிப்ரம் ஸஹாஸ்யாஸ்ஃ துல்யோ ஹவது ராகவ'। எனும் வாக்யத்தின்படியே, பகவானுடைய பரிஜநங்களில் விபீஷணன் சேர்ந்தார்.

ஆனால் பகவான் விபீஷணனுக்கு லங்காராஜ்யம் கொடுத்தாரே யென்றால், அது அவருடைய க்ருபா பரீவாஹத்தில் சேர்ந்தது. ஸர்வோத்தமனான ப்ரஹ்லாதனை நோக்கி, அபேக்ஷித்த வரங்களைக் கேட்கும்படி ரக்ஷகன் ஆஜ்ஞாபிக்கவே, 'யதி தாஸீஸ மே காமாந் வராம்ஸ்த்வம் வரதர்ஷப: காமாநாம் ஹ்ருத்யஸம்ரோஹம் ஹவதஸ்து வ்ருணேவரம்'॥ "ஈப்ஂனே! அபீஷ்டப்ரதர்க்குள் ப்ஂரேஷ்டனே! எனக்கு இஷ்டமான வரங்களை நீ கொடுக்கின்றாயாகில், என் ஹ்ருதயத்தில் காமங்கள் உதிக்காதபடி உன்னிடம் வரம் கேட்கின்றேன்" என்று ப்ரஹ்லாதன் கூறினான். இன்னும் 'அஹமகாமஸ்த்வத்பக்த: த்வஞ்ச ஸ்வாம்யநபாஸ்ரய:'। "நானோ காமமற்ற உன் பக்தன்; நீயோ ப்ரயோஜநாந்தர அபிஸந்தியில்லாத என் ஸ்வாமி" என்றும் சொன்னான். ஆகிலும் "நைகாந்திநோ மே மயி ஜாத்வீஹாஸிஷ ஆஸாஸதே அமுத்ர வா யே ஹவதீயா:। ததாபி மந்வந்தரமேதத்ர தைத்யேஸ்வராணாம் அநுபுங்க்ஷ்வ போகாந்"॥ "உன் போன்ற எனது பரமைகாந்திகள் என்னிடம் ஐஹிகமாயும் ஆமுஷ்மிகமாயுமுள்ள ப்ரோயஜநங்களை இச்சிக்கின்றாரில்லை. ஆனாலும் இவ்வுலகில் இம்மந்வந்தரம் வரையில் தைத்யேப்ஂவரர்களுடைய போகங்களை அநுபவிப்பாய்" என்று ஸ்ரீ ந்ருஸிஹ்மன் அவனுக்கு ஆஜ்ஞை செய்தார். அப்படியே அநந்யப்ரயோஜநனாய்ப் பகவானைக் கிட்டிய விபீஷணனுக்கும் பகவத் கருணையால் லங்காராஜ்யமும் ஆநுஷங்கிகமாக ஸித்தித்தது.

விபீஷண ஶரணாகதியை வ்யாஜமாக வைத்துக்கொண்டு ஸர்வபூதங்களுக்கும் தான் ஶரண்யன் என்பதையும், ஸாங்கமாகத் தனைச் சரணமடைந்தவர்க்கெல்லாம் தான் அபயப்ரதனாக நிற்பதையும், ஸ்ரீராமன் முதலில் மநுஷ்யலோகத்தில் காட்டியருளினார். ஹநுமான் தவிர, மற்ற ஸசிவர்கள் விபீஷணனை அங்கீகரிக்கக்கூடாதென்று தடுத்தும்,

'मित्रभावेन संप्राप्तं न त्यजेयं कथंचन ।
दोषो यद्यपि तस्य स्यात् सतामेतदगर्हितम्' ॥

என்று பகவான் மொழிந்தனர். மித்ரபாவம் என்றால் ராமாயணத்தில் ஶரணாகதத்வம் அர்த்தமாகின்றது. ஸர்வலோகஶரண்யனான ராகவனை ஶரணமடைகின்றேன் என்று சொல்லிக்கொண்டு விபீஷணன் வந்தார்; அவரை ஸ்வாமி மித்ரபாவத்துடன் வந்தவனாக அபிப்ராயப்படுகின்றார். பூர்வம் ஸுந்தரகாண்டத்திலும் பிராட்டி ராவணனைப் பார்த்து,

'विदितः स हि धर्मज्ञः शरणागतवत्सलः ।
तेन मैत्री भवतु ते यदि जीवितुमिच्छसि' ॥

என்றுரைத்தனள். "ஸதாம் தர்மம் அறிந்தவராகையால் ராகவன் ஶரணாகதவத்ஸலன். அவன் அப்படிப்பட்டவனென்று லோகமெங்கும் ப்ரஸித்தம். ஆதலால் ஓ ராவணா! உனக்கு ஜீவிக்க இஷ்டமுண்டானால் அவனுடன் உனக்கு மைத்ரீ (ஸ்நேஹம்) உண்டாகட்டும்" என்று பிராட்டி வசநதாத்பர்யம். ஆனபடியால் ராமாயணத்தில் மித்ரஶப்தம், ஶரணமடைதலைக் காட்டுகின்றது. ஸம்ப்ராப்தம் என்பதால், அங்க வைகல்யமில்லாமல் விபீஷணன் ஶரணமடைந்தார் என்பதை விளக்குகின்றது; அதாவது, புத்ரதாராதிகளுடைய பரித்யாக பூர்வகமாகச் சரணமடைந்தார் விபீஷணன். ஶரணாகதனை மித்ரனென்பதும், ஶரணாகதனிடம் பகவான் கொண்ட கௌரவத்தை ஸூசிப்பிக்கின்றது. न त्यजेयं कथंचन, என்று சொன்னபடியால், ஶரணாகதனுடைய

திரஸ்கார விஷயத்தில் தன்னுடைய ஶக்தியின்மையைப் பகவான் வெளியிடுகின்றார். தான் ஈஶ்வரனாய், ஸர்வஶக்தனாயிருந்தும், ஶரணாகத த்யாகத்தில் அஶக்தனென்பது, அந்த ஶக்தியின்மை தனது ஸ்வபாவத்தில் அந்தர்கதமாகி நின்று, தனது கல்யாண குணங்களில் சேர்கின்றதெனத் தாத்பர்யம். ஶரணாகதன் தோஷ யுக்தனானாலும் அந்தக் கல்யாணகுணரூபமான அஶக்தியானது அப்படியே நிற்கும். ஆதலால் பகவான் 'தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத்' என்றுரைத்தான். அதுஷ்டர்களுடைய பரிக்ரஹத்தில் விஶேஷமில்லை. அபராதிகளுடைய ரக்ஷணத்தில் தான் ஏற்ற முண்டு. ஆதலால் ஸுக்ரீவாதிகள் மொழிந்த தோஷங்கள் விபீ ஷணன் பக்கல் நின்றாலும், 'நானுன்னைச் சரணமடைந்தேன்' என்று அவன் சொன்ன மாத்ரத்தாலேயே, 'அவனை நான் பரி க்ரஹிக்காமல் விடமாட்டேன்' என்றல்லோ பகவான் தன் திரு வுள்ளத்தைக் காட்டினான்? இப்படித்தான் ஶிஷ்டர்கள் அநுஷ் டாநமிருக்குமென்று, 'ஸதாமேதச்ச ஸம்மதம்' என்று ஸாதித் தருளினார். அமர்ஹிதமென்றால் பூஜிதமென்றர்த்தம். இதை நிஷ் கர்ஷிக்கும் பொருட்டுப் பின்னால் கபோத வ்ருத்தாந்தத்தைப் பகவான் ஸ்வயமே விவரித்தருளினான். தன்னிலையறியாத ஸுக்ரீ வாதிகளை த்ருப்தி செய்ய அப்படிச் செய்தாரேயன்றித் தன் ப்ரவ்ருத்திக்கு ஶிஷ்டருடைய அநுஷ்டாநம் யோசிக்க வேண் டியதென்கிற தாத்பர்யம் ஸ்ரீராமனுக்கு உதிக்காது.

(இன்னும் வரும்.)

பத்ராதிபர்.

ஸ்ரீ:

# * ஆர்ய வித்யை.

(தொடர்ச்சி)

வித்யையின் முக்யாம்சங்களாக மேற்கூறப்பட்ட விஷயங்களைக் கவனித்து, இவ்விரண்டு பத்ததிகளின் (அதாவது, ஸ்வதேசவித்யாபத்ததி, விதேசவித்யாபத்ததி) உபயோகத்தைப் பரீக்ஷித்தால் இவைகள் இப்போது நடைபெற்று வருகிறபடி ரொம்பவும் ந்யூநமாயிருக்கின்றனவென்பது ஸ்பஷ்டமாகிறது. ஸ்வதேசபத்ததியில் முன்னே மநுஷ்யனுக்கு ஸம்ஸ்காரார்ஹமென்று கூறப்பட்ட சரீரம், புத்தி மநஸ், ஆத்மா, இவைகளில் புத்தி என்கிற அம்சம் தவிர மற்றெதுவும் கவனிக்கப்படுகிறதில்லை. புத்தி ஸம்பந்தப்பட்ட வரையில் கூட அதன் ப்ரதாந சக்திகளாகிய ஊஹாபோஹம், அர்த்தவிஜ்ஞாநம், தத்வஜ்ஞாநம், அதன் உட்பிரிவாகிய கல்பநாசக்தி அல்லது ப்ரதிபை இவைகளைக் கொஞ்சங்கூட வ்ருத்தி பண்ணமல் கேவலம் அநுவாகத்தால் சப்தாநுபூர்வியைத் தரிப்பதே ஸர்வஸ்வமாகக் கைக்கொள்ளப்பட்டிருக்கிறது. விதேசபத்ததியானது சில வர்ஷங்களுக்கு முன் இருந்த ப்ரகாரம் மேற்சொல்லப்பட்ட ஸம்ஸ்க்ருத வித்யாபோதந க்ரமத்தையே பெரும்பாலும் அநுஸரித்து ஸ்மரண தாரணங்களேயே அவலம்பித்திருந்தது. இப்போது சில வர்ஷங்களாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் புது மாதிரியான போதநாப்ரகாரமானது முன்னிருந்த க்ரமத்தின் குறைவுகளைப் போக்கி, புத்தியின் எல்லாக் குணங்களையும், அதாவது ஊஹாபோஹாதிகளை ஸமமாக வ்ருத்தி பண்ணுவதை அவசியமாகக்கொண்டிருப்பதாகவும், முன்போல் ஞாபக சக்தியை மாத்ரம் தேர்ச்சியடைவிப்பது உசிதமல்லவென்று, அந்த மார்க்கத்தை அவலம்பிக்கவில்லையென்றும் இதன் ப்ரவர்த்தகர்களால் உத்கோஷிக்கப்படுகிறது. ஆனால், சற்று கவனித்தால், இது புத்தி

---

* ப்ரமாதீசஞு ஆனிமாத்து ஸஞ்சிகையில் இதன் முன்பாகம் வந்திருக்கிறது.

யின் ஒரு சக்தியையும் வ்ருத்தி பண்ணுமல், பிள்ளைகளுக்குப் போது போக்கான சில நிஷ்பலக்ரியைகளைச் செய்யக் கற்பிப்ப தோடு சரிதார்த்தமாகிறதென்று நமக்குப் புலப்படுகிறது. முன் வழங்கி வந்த ரீதியை அநுஸரித்துத் தாரணுதிகளான சில புத்தி சக்திகளாவது ஸம்ஸ்கரிக்கப்பட்டது போய், ஒரு வித தேர்ச்சி யுமில்லாமல் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தை விட்டு வருங்காலத் தில் வய: ப்ரயுக்தமான மாறுதல் தவிர, மற்ற அம்சங்களில் பள்ளிக்கூடத்தில் படிக்க ஆரம்பித்தபோது இருந்ததற்குச் சற் றேறக்குறைய அதிக வித்யாஸமில்லாமலிருப்பதைக் காணும்படி நேரக்கூடியதாயிருக்கிறது. இப்போது நடைபெறும் பத்ததியின் ஸ்வரூபத்தைத் தெரிவிக்க ஒரு சிறிய உதாஹரணம் போதுமா னது. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் அக்ஷராப்யாஸ வகுப்பு துவக்கி, ஸுமார் ஐந்து வர்ஷத்துக்குக் குறையாமல் ஸர்வ ஸாதா ரணமாய் ஸங்கீதம், அபிநயம், சித்ரம் எழுதுவது, மண் முதலிய த்ரவ்யத்தால் பிம்பங்கள் செய்வது முதலியவை முக்ய பாடங்க ளாகச் சொல்லிவைக்கப்படுகின்றன. இதற்குத் தனியாக உபாத்யா யர்கள், ஸங்கீத வித்வான்களாவது சித்ரகாரர்களாவது கிடை யாது. மற்றெல்லாப் பாடங்களும் கற்பிக்கும் உபாத்யாயர்களே இவைகளையும் கற்பிக்கின்றார்கள். பிள்ளைகளில் ஸங்கீதத்தில் அபி ருசியுள்ளவர்களுக்கு ஸங்கீதம், சித்ரம் எழுதுவதில் ஊக்கமுள் ளவனுக்கு சித்ரகர்மம், என்கிற வ்யவஸ்தையும் கிடையாது. எல்லாருக்கும் எல்லாம் ஸ்தூலமாய்ச் சொல்லிவைக்கப்படுகிறது. இதன் ப்ரயோஜநம் என்னவென்றால், ஒருவருக்கும் ஒன்றும் தெரியாமற்போவது தான். ஆயினும் இந்தப் பாடங்கள் மிகவும் ஊக்கத்துடன் நடத்தப்படுகின்றன. பரீக்ஷகர்கள் இந்தப் பாடங் களை முக்யமென்று நினைத்து, இவைகளில்லாத பள்ளிக்கூடங் களை ராஜாங்கத்தின் ஆதரவுக்குப் பாத்ரமல்லவென்று தீர்மானிக் கிறார்கள். இந்த பத்ததி கொஞ்சங்கூட ஸாதுவல்லவென்பது சொல்லவேண்டுவதில்லை. ஸங்கீதம், அபிநயம், சித்ரகர்மம், இவை கள் ஸர்வஸாதாரணமாய் அப்யஸிக்கக்கூடிய கலைகள் அல்ல. ஜந்மாந்தர ஸம்ஸ்காரத்தால் அததில் அபிருசி ஜந்ம ஸித்தமாய் அமைந்துள்ளவர்களுக்கே அந்தந்த கலையில் யோக்யதை தேறு மேயொழிய, எல்லாரும் அவைகளில் ப்ரவேசிப்பது நிஷ்பலமா கவே முடியும். மேலும் அந்தந்த கலைக்குத் தனியாய் அததில்

ப்ரவீணனுயிருக்கும் ஆசார்யன் கற்பித்தால் உபயோகமிருக்குமேதவிர, யாராவது சொல்லிக்கொடுப்பதென்பது பரிஹாஸ்யமான ஆரம்பம். இதற்கு நிதர்சநம் ப்ரத்யக்ஷமாய்க் காணப்படுகிறது. இப்போதிருக்கும் பள்ளிக்கூடங்களின் ஸமீபத்தில்போகும் போதே, கர்ணகடோரமான ஸங்கீதமென்று சொல்லப்படும் கோஷமும், உள்ளே நுழைந்தால், பார்க்க ஸஹிக்காத சித்ரங்களென்று சொல்லப்படும் கிறுக்கின காகிதங்களும் நமக்கு அதி துஸ்ஸஹமான உத்வேகத்தை விளைவிக்கின்றன. இப்படிப்பட்டவிபரீதாநுஷ்டாநத்தால் யாருக்குத்தான் உபயோகமோ தெரியவில்லை. அப்யஸிக்கப்படும் கலைக்கும் இதனுல் உபகாரமில்லை. அப்யஸிக்கும் பாலர்களுக்கும் யாதொரு வ்ருத்தியுமில்லை. ப்ரத்யுத, உபய பக்ஷத்திலும் ஹாநியே இதனுல் ஸம்பவிக்கின்றது. உதாஹரணமாகக் கூறப்பட்ட இந்த விஷயத்தில் எப்படியோ, அப்படியே தான் மற்றெல்லா அம்சங்களிலும் இப்போதைய நவீந பத்ததிக்கு வைபரீத்யமே முக்ய தர்மமாயிருக்கின்றது.

இதம்பரமாய், ஸம்ஸ்கரிக்க ஆரம்பித்த புத்தி சக்திகளே இந்த கதியை அடைந்திருக்க, மநுஷ்யனுடைய மற்ற மூன்று அம்சங்களாகிய சரீரம், மநஸ், ஆத்மா என்பவைகளைப்பற்றிக் கதை ஏது? அவைகள் இருப்பதாகவே எண்ணங் கிடையாது. இவ்விதமாக நம் பாலர்களுடைய வித்யை மிகவும் சோச்யமான பாரிப்லவத்தை அடைந்திருப்பதால், அதை நாம் முக்மாய்க் கவனித்து ஒழுங்கு செய்யவேண்டியது நமது முதற்கடைமை என்று நாம் உணர்ந்து, நடவடிக்கை நடத்தவேண்டியிருக்க, அதை அவ்வாறு எண்ணுமல், இதர விஷயங்களைக்காட்டிலும் இதில் ஶ்ரத்தைக்குறைவு நமக்கு ஏற்பட்டிருப்பதைப் பார்க்க, ஒவ்வொரு விவேகியின் ஹ்ருதயத்திலும் மிகுந்த துக்கமுண்டாகிறது.

வித்யை தான் மநுஷ்யர்களுக்கு ஸர்வ ப்ரகாரமான ஶ்ரேயஸ்ஸுக்கும் காரணம். வித்யா விரஹம் தான் ஸர்வ ப்ரகாரமான அநிஷ்டத்துக்கும் மூலகாரணம். ஜ்ஞாநத்தால் ஆநந்தமென்றும், அஜ்ஞாநத்தால் துக்கமென்றும் நம் பெரியோர்கள் அநாதியாய்ச் சொல்லிவருவதும் இது தான். யதார்த்தமான லோகஜ்ஞாநம் தான் யதார்த்தமான பரலோக ஜ்ஞாநத்தை ஸாதிக்கும். லோகஜ்ஞாநமில்லாமல் பாரலௌகிக ஜ்ஞாநம் ஸாதாரணமாய் ஸித்திப்பத

ரிது. இது தான் "𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌕𑌰𑍍𑌮𑌚𑌿𑌤𑌾𑌨𑍍 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌮𑌾𑌯𑌾𑌤𑍍" என்று ஶ்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்வயம் லோகபரீக்ஷையினால் ஒருவனுக்கு அநுபவஸித்தமாகிற தோஷங்களைப் பார்த்து, அதில்ஹேயதா புத்தி நிலைபெற்று, அதன்பேரில் ஏற்படும் நிர்வேதம் தான் அவனைப் பரவித்யைக்குத் தகுந்த அதிகாரியாக்குகிறது. ஜிஜ்ஞாஸை ஏற்பட்டால் தான் வித்யோபதேசத்துக்கு அவஸரம். இது வரையில் ஜ்ஞாதமாயிருக்கும் விஷயங்களில் அபர்யாப்தி தோன்றினால், தானே அதற்கு மேற்பட்ட விஷயமிருக்கிறதா வென்று ஜிஜ்ஞாஸை உண்டாகும். இதுவரையில் கோசரமாயிருக்கும் விஷயங்களின் ஸ்வரூபஸ்வபாவங்களை யதாவத்தாக அறிந்துகொண்ட பிறகு, அவைகளில் அபர்யாப்தாபுத்தி உண்டாகக்கூடும். ஆகையால் லோக பரீக்ஷைக்கு வேண்டிய வித்யையைப் பூர்ணமாய் அப்யஸித்து, யதார்த்தமான லோக ஜ்ஞாநத்தை ஸம்பாதித்து, அதிலிருந்து பரலோக ஜ்ஞாநமாகிய மேல்படியில் ஏறுவது தான் ஸாதாரணமான க்ரமம். இதைத் தான் நம் பெரியோர்கள் பல ஸந்தர்ப்பங்களில் விசத விசதமாய்க் கூறியிருக்கிறார்கள். 'பரலோகத்தையே உத்தேசித்து இந்த லோகத்தை நாம் கவனிக்கவேண்டியதில்லை. இந்த லோகம் இருப்பதாகவே நாம் நினைக்கக்கூடாது. இதைத் தெரிந்துகொள்வதற்கு ப்ரயத்நம் செய்யவேண்டியதில்லை. இதைச் சேர்ந்த கர்த்தவ்யங்கள் நமக்கு ஒன்றுமில்லை. ஸாக்ஷாத்தாக, அதாவது, இந்த லோகத்தின் ஸம்பந்தம் எவ்விதத்திலும் இல்லாமலே நாம், பாரலௌகிக ஜ்ஞாநம் ஸம்பாதிக்கவும், பரலோக ஸாதநமான கார்யங்கள் செய்யவும் வேண்டும்' என்பதாக நம் பெரியோர்கள் அபிப்ராயம் என்று இப்போது ஸஹஜமாய் அநேகர் சொல்வதை நாம் அறிந்திருக்கிறோம். அது மிகவும் தப்பிதம். லோகாநுபவமும், லோக ஜ்ஞாநமும் மிகவும் அவசியம்; அது தான் முதற்படி. அதை அவலம்பித்துத் தான் மேலே செல்ல முயற்சிக்கவேண்டும். ஆகையால் லோகத்தை ஸரியாய் அறிந்து, அதன் குண தோஷங்களை உணர்ந்து, அது நமக்கு ஒரு ஸோபாநமே யல்லாது பரமாவதியல்லவென்று செம்மையாய் அநுபவத்தில் அறிந்து, அதில் ப்ராப்யதா புத்தியையும், அதைச் சார்ந்து ஏற்படும் உத்கடமான ஆஸக்தியையும் விலக்கி, மேல் விஷயங்களில் நோக்குடன், ஸமக்ர

மான உபாயாநுஷ்டாநம் பண்ணவேண்டியது தான் நமக்கு ப்ராப்தமானது. ஆகையால் இவ்விதமான ஸந்மார்க்கத்தை நமக்குச் செப்பனிட்டு வைத்திருக்கும் "ரோதாவித்ய வஹஸ்ஹ்ரா வதஔதாஶம் ஶாஸ்த்ரம்", என்று அந்வர்த்தமாக ப்ரஸித்தி பெற்ற நம் மூத்தோர் வாக்யங்களின் உண்மையை நாம் ஸரிவரத் தெரிந்துகொண்டு, அந்த மார்க்கத்தில் வித்யாப்யாஸம் செய்யும்பக்ஷத்தில், நமக்கு ஸர்வ பல ஸித்தியும் உண்டாகுமென்பதற்கு ஸந்தேஹமில்லை.

அந்த மார்க்கத்தின் ப்ரகாரம் ஶ்ருதியிலும், மந்வாதி ஸ்ம்ருதிகளிலும், ஸூத்ரங்களிலும் வ்யவஹரிக்கப்பட்டிருக்கிறது. இதிஹாஸங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. இதம்பரமாக ப்ரவ்ருத்தித்த நாரதசிக்ஷை முதலிய க்ரந்தங்களிலும் வ்யக்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் அதைப் பூர்ணமாய்த் தெரிந்துகொண்ட விவேகிகள், அம்மார்க்கத்தை ஏற்படுத்தின மஹர்ஷிகளுடைய ஆசயத்தையும், அவர்கள் வாக்யங்களின் தத்வார்த்தத்தையும் மயர்வற வுணர்ந்து, தங்களுடைய அநுபவத்தையும் ஒட்டி, இப்போதிருக்கும் தேசகாலாதி ஸந்நிவேஶ விஶேஷத்தியையும் பராமர்சித்து, தகுந்தபடி நம் ஆர்யபாலர்களுக்கு ஒரு வித்யாபதம் ஏற்படுத்தவேண்டியது, ஆர்ய குலத்தில் அபிமாநமும் அக்கறையுமுள்ள ஒவ்வொருவரும் வஹிக்கவேண்டிய பரமாயிருக்கிறது.

இது விஷயத்தில் என்னென்னவிதமான நிஷ்பத்தி செய்யவேண்டியதென்று ஸம்பூர்ணமாக விவரிக்கவாவது, அல்லது திக்தர்சநம் பண்ண யத்தநிக்கவாவது, நான் ஸர்வ ப்ரகாரமாயும் அசக்தனுயிருந்தபோதிலும், இதிலிருக்கும் ஆஸ்தையாலும், இப்போது நம் தேசத்தில் வித்யைக்கு ஏற்பட்டிருக்கும் மாலிந்யத்தால் உண்டாகும் துக்கத்தினுலும், இது நம் தேசத்தின் க்ஷேமத்தைக்குறித்து நாம் கவனிக்கவேண்டிய முக்யாம்சமென்று ஆஸ்திகர்களும் தேசாபிமாநிகளுமான புத்திமான்களுடைய மநஸ்ஸில்

வேருன்றச் செய்துவிட்டால், அவர்களால் தகுந்த பரிஹாரம் ஏற்படும் என்கிற நம்பிக்கையாலும், என் புத்திக்கு எட்டியவரையில் சில அபிப்ராயங்களை இதில் வெளியிடுகிறேன்.

மேலே கூறியவாறு மநுஷ்யனுடைய நாலு அம்சங்களாகிய சரீரம், புத்தி, மநஸ், ஆத்மா, இவைகள் ஒன்றுக்கொன்று உபகாரமாக, அதனதன் குணங்களாலும், சக்தியாலும், வ்யாபாரத்தாலும் மற்றென்றைப் போஷித்துக்கொண்டு, எல்லாம் ஒருமிக்க மநுஷ்யனுடைய நிஶ்ரேயஸத்தை ஸாதிப்பதற்குத் தேவையான ஸம்ஸ்கார ப்ரக்ரியை தான் வித்யையென்று நிஷ்கரிஷிக்கப்பட்டது. இவற்றுள், ஒவ்வொன்றின் ஸ்வரூபமும், ஸ்வபாவமும் வேறுபட்டதாகையால் அததற்குள்ள ஸம்ஸ்கார ப்ரகாரமும் வித்யாஸப்பட்டதாகவே இருக்கிறது. அதாவது, சரீரத்துக்கு ஆசாரமும், புத்திக்கு அத்யயநமும், மநஸ்ஸுக்கு அப்யாயாஸமும், ஆத்மாவுக்கு த்யாநமும் ஸம்ஸ்காரங்களாக ஏற்பட்டிருக்கின்றன. ஸமீசீநமான வித்யையின் பல மென்னவென்றால், இந்த அம்சங்களில் ஒவ்வொன்றுக்கும் ஏற்படும்ஸம்ஸ்காரத்தால், அந்தந்த அங்கமும் (அதாவது மேற்கூறிய அம்சமும்) அங்யாத்ருஶமான தேர்ச்சியை யடைவதுடன், அதனாலேயே இதர அம்சங்களின் சக்தியை வ்ருத்திபண்ணுவதற்கு ஸஹகாரியாயிருந்து, பர்யவஸாநத்தில் அங்கியின் பரமஶ்ரேயஸ்ஸை ஸாதிப்பது தான்.

இப்படிப்பட்ட ஒற்றுமை ஏற்பட்டால், ஒரு அங்கத்தின் சக்தியை மாத்ரம், அல்லது சில அங்கங்களின் சக்திகளை மாத்ரம் வ்ருத்திசெய்து, அதனால் இதர அங்கங்களின் சக்திக்குக் குறைவு உண்டுபண்ணுவதும், ஒரு அங்கத்தின் சக்திக்கும், மற்றென்றின் சக்திக்கும் ஸங்கர்ஷம் உண்டாக்கி, வைஷம்யத்துக்கு ஹேதுவைத் தேடிக்கொள்வதும் ஸத்வித்யையின் லக்ஷணமல்ல. ஒரு ரதத்தில் கட்டப்பட்ட இரண்டு குதிரைகளையும் ஸாரதியானவன் கடிவாளங்களால் பிடித்துத் தான் உத்தேசித்த வழியில் நடத்துவது போல், சரீரம் - புத்தி - என்கிற இரண்டு அம்சங்களையும், ஜீவாத்மா, இந்த்ரியவர்க்கங்களுடன் கூடின மநஸ்

ஸாகிற கடிவாளங்களால் பிடித்து நடத்துகிருன். ரதத்தின் அப்ரவங்கள் ஒவ்வொன்றும் புஷ்டமாகவும், பலமுள்ளதாகவு மிருக்க வேண்டியது அவப்யம். ஆனுல் ஒரு அப்ரவத்தின் பரக்தி, மற்ருென்றின் ஶக்தியுடன் சேர்ந்து, இரண்டும் ஒருமிக்க ரதத்தை உத்தேசித்த இடத்துக்கொண்டுபோனுல் மாத்ரம் யுக்தமே தவிர அப்ரவங்கள் ஒன்றுக்கொன்று விரோதமாய் இழுத்தாலாவது, இரண்டும் சேர்ந்து விபரீத மார்க்கத்தில் கொண்டுபோனுலாவது, அநர்த்தமே ஸம்பவிக்கும். இப்படியே கடிவாளமும் உறுதியாயிருக்கவேண்டியது அவப்யம் தான். ஆனுல் ரதத்தை ஓட்டுகிறவனுடைய கைக்கு அடங்கியும், ம்ருதுவாகவும், இழுத்த வழியில் இழுக்கும்படி வப்யமாகவும் இராமல், கைக்கு அடங்காமலும், கடிநமாகவும், ஸ்வாதீநமில்லாததாகவு மிருந்தால் கார்ய காரி யாகமாட்டாது. இவ்வளவும் ஸரியாய் அமைந்திருந்தும், ரதத்தின் நேதாவுக்கு நல்ல வழி கண்ணுக்குப் புலப்படாமல் அபாயமான மார்க்கமே நல்லதாகத் தோன்றினுல், எல்லாம் வ்யர்த்தமாகவே பர்யவஸிக்கும். இது போலவே நம்முடைய சரீரம், புத்தி இவ்விரண்டின் பரக்தியையும் அநுகூலமான மார்க்கத்தில், நாம் மேன் மேலும் வ்ருத்தி செய்யவேண்டியது. மநஸ்ஸையும் செம்மையாய்ப் பரிஷ்கரித்து, நிர்மலமாக்கி, ஆத்மாவிற்கு வசப்பட்ட கையாளாகச் செய்யவேண்டியது. ஆத்மாவும் அநவரதம் அவிச்சிந்நமான பகவத்யாநத்தினுல், தன் ஸ்வரூப ஸ்வபாவங்களையும், தன்னிடம் நியந்தாவாகிய ஸர்வாந்தர்யாமியும் ஸர்வபேரஷியுமான பகவானுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களையும், விபரதமாய் ஸாக்ஷாத்கரித்து, நிஃஶ்ரேயஸ பதவியில் தன்னையும், மேற்கூறப்பட்ட தன் அங்கங்களையும் செலுத்தவேண்டியது. இது தான் ஆர்ய வித்யையின் பரமபலம்.

வித்யை இப்படி மஹா பலமுள்ளதென்று நம் பெரியோர்களான மஹர்ஷிகள் உணர்ந்திருந்தபடியால் தான், அவர்கள், ஆசார்ய ஶிஷ்ய ஸம்பந்தத்தைப்பற்றி மிகவும் ப்ரஶம்ஸித்து, விசேஷமான கவனத்துடன் அதற்கு வேண்டிய அம்சங்களை விவரித்

திருக்கிறார்கள். மற்றெல்லா விஷயங்களைக் காட்டிலும் ப்ருஹ்மசர்யம், குருகுலவாஸம் இவைகளை ப்ரதானமாகக் கைக்கொள்வதற்குக் காரணமும் இதுவே. உபநயனம் என்பது ஒரு சிறுவனை வித்யாக்ரஹணத்துக்கு அதிகாரியாக்குவதற்குத் தேவையான ஸம்ஸ்காரம். அது துவக்கி, அவன் வித்யாபரிஸமாப்தி வரையில் ஆசார்யன் வீட்டிலியே இருந்து வித்யாக்ரஹணம் பண்ணவேண்டியது. அது முதல் அவனுக்கு, ஆஹாரம், நித்ரை, மற்றுமுள்ள ஶாரீரமானஸ வ்யாபாரங்கள் எல்லாவற்றைக் குறித்தும் நியமம் ஏற்பட்டுவிடுகிறது. இனி அவன் முன்போல் காமசாரனாகவும், காம பக்ஷகனாகவும் இருக்கமுடியாது. இது விஷயமாய் தர்மஶாஸ்த்ராதிகளில் ஸாதாரணமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நிர்ப்பந்தங்களோடு, அந்தந்த ஆசார்யன் அந்தந்த ஶிஷ்யனுடைய ஸ்வபாவத்தை யறிந்து, அவனுக்குத் தக்கபடி ஏற்படுத்தும் விஶேஷ நியமங்களும் அநுஷ்டிக்க வேண்டியவைகள். ஒரு வைத்யன் ஆர்த்தனுக்கு மருந்து கொடுப்பதிலும், பத்யம் வைப்பதிலும், வைத்ய ஶாஸ்த்ரத்தில் ஸாதாரணமாய்ச் சொல்லியிருக்கும் விதிகளை ஆலோசித்துச் செய்வதுடன், அந்த வ்யக்தியின் தேஹக்கூறை அநுபவத்தால் தெரிந்துகொண்டு, அதற்குத் தக்கபடியும் சிகித்ஸையை நடத்தவேண்டியது அவஶ்யமா யிருப்பது போல், ஆசார்யனும் தன் ஶிஷ்யனுடைய ஸ்வபாவத்தை நன்றாய் அறிந்து, அதற்கு அநுகுணமாக அவனுக்கு நியமாதிகள் ஏற்படுத்தவேண்டியது அவஶ்யம்.

நியமத்தை ஆஹாரநியமம், சேஷ்டாநியமம் என்று இருவகைப் படுத்தலாம். ஆஹாரநியமம் இருந்தால் தான் சேஷ்டாநியமம் ஸித்திக்கும். அஸாத்விகமான ஆஹாரங்களை உட்கொண்டால், அஸாத்விகமான சேஷ்டைகளுக்கும் காரணமாகுமென்பது ஒவ்வொருவருக்கும் அநுபவஸித்தம். “ஆஹாரஶுத்தௌ ஸத்த்வஶுத்தி:, ஸத்த்வஶுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி:” என்று சொல்லியபடி ஆஹாரசுத்தி ஏற்பட்டால், சரீரம் பவித்ரமாக்கப்பட்டு, அதன் சேஷ்டைகளெல்லாம் பரிசுத்தமாய், அதன் மூலமாய் மநஸ்ஸுக்கு சுத்தி உண்டாகிறது. பரிசுத்தமான மநஸ்ஸினால் ஆத்மாவுக்கு ஸ்வரூப ஜ்ஞாநம் உண்டாய், மேன்மேலும் ஶ்ரேயஸ்கரமான

ப்ரவ்ருத்திகளைக் கைக்கொள்ளுகிறுன். இவ்விருவகை நியமமும் தான் ப்ருஹ்மசாரிக்கு ஶாரீர ஸம்ஸ்காரம். இது தான் முன்னமே ஆசாரமென்று கூறப்பட்டது.

இந்த ஸம்ஸ்காரம் நடந்து கொண்டிருக்கையிலேயே, அத்யயநத்தால் புத்தி ஸம்ஸ்கரிக்கப்பட்டு வரவேண்டியது. அத்யயநம் என்றுல், அர்த்த ஜ்ஞாந ஸம்பாதநம். கேவலாநுவாகமல்ல. இந்தப் பதத்தின் வ்யுத்பத்திக்கு விருத்தமாய், அநுவாகாப்யாஸம் என்கிற அர்த்தம் இதற்கு என்ன காரணத்தினுல் ப்ரஸித்தி யடைந்திருக்கிறதோ தெரியவில்லை. ஆசார்யன் ஶிஷ்யனுடைய ஶக்தியைச் செம்மையாய்க் கண்டுகொண்டு, அதற்கு அநுகுணமாய் கணஶ꞉கணஶ꞉ அவனுக்குப் போதம் உண்டாக்குவதால் அர்த்த ஜ்ஞாநம் நிஷ்பந்தமாகிறது. அர்த்த ஜ்ஞாநம் ஶிஷ்யனுக்குக் கொஞ்சம் ஏற்பட்டவுடன், அதை மேன்மேலும் ஆவாபோத்வாபாதி ப்ரகாரங்களால் வ்ருத்திசெய்து, யதார்த்தமான அர்த்த ஜ்ஞாநம், அதை யதாவத்தாக ப்ரதிபாதநம், முதலிய புத்தி ஶக்திகளைப் படிப்படியாகப் பெருக்கச் செய்ய வேண்டியது ஆசார்யன் கடமை. ஒரு சிறு நெருப்புப் பொறியைக் கொஞ்சங் கொஞ்சமாய் முதலில் மூச்சுக் காற்றினுல் ம்ருதுவாக ஊதி, ரொம்பவும் அல்பமான வைக்கோல், ஓலை முதலிய இந்தந ஸாமக்ரிகளை மிதமாகக் கொடுத்து, அந்தப் பொறியை ஜ்வலிக்கும்படி செய்து, பிறகு க்ரமேண, சுள்ளி, கட்டை முதலியவைகளைச் சேர்த்து, மேன்மேலும் பெரிய அக்நியை வளர்த்துவது போல, ஆசார்யன் முதலில், பால புத்திக்குத் தகுந்தபடி லலிதமான விஷயங்களை ப்ரியமாகப் போதித்து, சிஷ்யன் புத்தியில் ப்ரகாஶத்தை உண்டாக்கி, பிறகு படிப்படியாய் மஹார்த்தங்களில் அதற்கு ப்ரவேஶம் உண்டுபண்ணுவது தான் ஸரியான முறையாகும்.

(இன்னும் வரும்.)

தி. ஈ. சடகோபாசாரியர்.

# ஜநகநந்திநி.

## ஓர் உபாக்யாநம்.

(தொடர்ச்சி.)

ஜநகநந்தினி பன்னிரண்டாவது பிராயத்தைக் கடக்குங்கால் வைசாக உத்ஸவம் வந்தது. பகவத் ஸேவார்த்தம் பஹு ஜநங்கள் காஞ்சீபுரத்தில் கூடினர். வேறு உத்தேசயங்களாலும் அந்நகரத்தில் அநேகர் கூடினார்கள். கல்யாண வார்த்தைகள் முடிப்பதற்கு அக்காலம் தகுந்ததென்று வருபவர்களும் உண்டு. அநேகம் ப்ராஹ்மணப் பெண்கட்கு வரன்கள் அமைந்தனர். வைதிகஸார்வபௌமரான கேசவாசார்யர் பெற்று வளர்த்த பெண்மணிக்கு ஓர் தக்க வரன் அமையவில்லை. பாஷாந்தரப் பயிற்சியும், ப்ரஷ்டர்களுடைய ஆசாரங்களும், கூடி வளர்வதால், தத்வார்த்த விமர்சியான தன் புத்ரியைப் பாஷாந்தரம் படித்தவர்க்குத் தானம் செய்ய அவர் இச்சிக்கவில்லை. வைதிகவ்ருத்தியும், தாரித்ரியமும், கூடியே நிற்றலால் பெண்ணைப் பரிக்க உபபத்தி யற்றவர்க்கும், அவளைக் கொடுக்க அவர் இசைந்தாரில்லை. இவ்வண்ணம் வரன் கிடைக்காமல், சாஸ்த்ரம் வரம்பிட்ட வயதை அவள் அதிக்ரமிக்கப் பார்த்து அவர் வருந்தினர். வைதிக குலப்ரஸூதரான பாஷாந்தரம் படித்தவர்க்குக் கொடுக்க முடிவாகத் தன் மனஸைத் திருப்பினராயினும், அவர் யோசித்த ஒவ்வொரு ஸ்தாநங்களிலும் கேட்கப்பட்ட வரதக்ஷிணையை நினைக்க நினைக்கத் திடுக்கிட்டுப் போயினர்.

வைநதேயன் மீதேறித் திருவீதிகள் அலங்கரித்துவிட்டு வரதன் ஸந்நிதிக்குத் திரும்பினர். பகவான் பின்னால், வேதகோஷ்டியில் கைங்கர்யம் செய்துவிட்டுக் கேசவாசார்யர் இல்லம் சென்றனர். தத்கால நியதமான ஆஜ்ஞா கைங்கர்யங்களை அநுஷ்டித்துவிட்டு, ச்ரம பரிஹார நிமித்தமாக நடைத் திண்ணையில் படுத்

துக்கெண்டார். ஸாயங்காலம் வந்த பிறகு ஜநகநந்தினி வீட்டினின்றும் வீதியில் இறங்கினள். வீட்டின் முன் வீதியில் தண்ணீர் தெளித்து, மண்ணினைப் போக்கி, ரங்கவல்லிகளால் அந்த ப்ரதேசத்தை அலங்கரித்துக் கொண்டிருந்தாள்.

"ஜநகம்! கோலமிடுகின்றையோ?" என்ெறாரு சிறுவன் சொல்ல, முகமெடுத்துப் பார்த்தனள். "எப்போது வந்தாய் ஸ்ரீநிவாஸா?" என்று அவனை வினவினள்.

"நேற்றிரா இவ்விடம் வந்தேன். உத்ஸவத்தின் கூட்டத்தால் உன்னை இதுவரையிலும் பார்க்கத் தடையாயிற்று. ஸுகமாயிருக்கின்றையா?" என்று சிறுவன் மொழிந்தான்.

"ஸுகமே யிருக்கின்றேன். உன் பள்ளிக்கூடம் மூடிவிட்டார்களோ? ஸௌக்யமாக இருக்கின்றையோ?" என்று ஜநகநந்தினி கேட்டாள்.

"பள்ளிக்கூடம் மூடித்தான் இவ்விடம் வந்தேன். நான் ஸௌக்யம் தான். என்ன இவ்வளவு விஸ்தாரமாக இந்த வீண் தொழில் செய்கின்றையே?" என்றனன் ஸ்ரீநிவாஸன்.

"இது வீணென்பதும் நன்றென்பதும் அபிப்ராயபேதம். உன் போல் நானதை நினைக்கின்றேனில்லை" என்றாள் ஜநகநந்தினி.

"என்ன? விக்ரஹங்களை வைத்துக்கொண்டு விளையாடுகின்றீர்கள்? ஜநங்களுக்கு உபகாரமான தொழில்களில் காலங் கழித்தல் நலமன்று"? என்றனன் ஸ்ரீநிவாஸன்.

"ஆத்மா உஜ்ஜீவிக்கும் வழியென்று நம்பி, வாக்குக்கும் மநஸுக்கும் எட்டாத ஸ்வரூபத்துடன் கூடிய பரமேச்வரனை, அவன் இட்ட கட்டளையென்று நம்பினபடியே, திவ்ய மூர்த்திகள் மூலமாக, அவற்றுள் அவன் ஸாந்நித்யம் செய்கிறான் என்று விச்வஸித்து உபாஸிக்கும் ஜநங்களை, இவ்வளவு எளிதாக நிந்திப்பது ஸத்வ்ருத்தமென்று எண்ணுகின்றையோ? இதுதானா உன் படிப்பின் ப்ரோயஜநம்? இந்த விஷயத்தில், உன் புத்தியை மயக்கினவர்களுடைய விஷமோக்திகளைத் தவிர, உனக்கு அபரோக்ஷமான அநுபவம் ஏதாவதுண்டோ? என்ன ஸ்ரீநிவாஸா? இப்

படிக் கெட்டுப்போனாயே ?" என்று ஜநகநந்தினி வெறுப்புடன் சொன்னாள்.

"ஆத்மா உண்டென்றும் பரமேச்வரன் ஒருவன் இருக்கின்றான் என்றும் உனக்கெப்படித் தெரியும் ?" என்றான் ஸ்ரீநிவாஸன்.

"அதில் ஶாஸ்த்ரம் ப்ரமாணம்; ஆப்தர்களென நாம் மதிக்கும் மஹாத்மாக்களுடைய அநுபவமும், அதை வெளிப்படுத்தும் வாக்யங்களும் ப்ரமாணம். ஶரீரங்களெனப்பட்ட ப்ரக்ருதியின் விகாரங்களில் சேராமல், உன்னிடமும், மற்று யாவரிடமும், தனக்குத் தானே ப்ரகாசிக்கும் சேதநர்கள் ப்ரமாணம்" என்றாள் பெண்மணி.

"ஜநகம் ! என்னமோ மனம் போனபடிப் பேசிவிட்டேன். என்னை நீ மன்னிப்பாய். அப்பா எங்கே இருக்கிறார் ?" என்றனன் சிறுவன்.

"உள்ளே இருக்கின்றார்" என்று சொல்லிவிட்டு, ஜநகநந்தினி தன் கார்யத்தைப் பார்த்தனள். ஸ்ரீநிவாஸனும் உள்ளே சென்றனள். அங்கவன் சிறிது நேரம் கழித்து வெளிப்பட்டவரையில், ஹஸ்திகிரீசன் எழுந்தருளப் போகின்ற வீதியை அலங்கரித்துக் கொண்டிருந்தாள். பிறகு உள்ளே ப்ரவேசிக்கும் கால், நடையில் எழுந்து உட்கார்ந்திருந்த தன் பிதாவைப் பார்த்தாள்.

கேசவாசார்யரும், பெண்ணே ! உனக்கும் ஸ்ரீநிவாஸனுக்கும் உரத்த குரலாய் வார்த்தை நடந்ததே ! என்ன விஷயம் ?" என்றனர்.

ஜநகநந்தினியும், அப்பா ! என்ன சொல்வேன் ! எம்மட்டும் அவன் கெட்டுப்போனான் ? நான் பெருமாள் எழுந்தருளும் வீதியலங்காரம் செய்தது வீண் தொழிலாம். விக்ரஹங்கள் வைத்துக் கொண்டு விளையாடுகின்றோமாம். ஆத்மாவும் இல்லையாம். ஈச்வரனும் இல்லையாம். இவ்வண்ணமெல்லாம் அவன் பேசினான்" என்றுரைத்தாள்.

"அதற்குத் தக்கபடி நீ விடைதந்தாயன்றோ ? பெண்ணே ! உங்கட்குள் ஸம்பாஷணையை நான் கிஞ்சித்துக் கேட்டேன். ப்ராசீந ஸுக்ருதத்தால், உனக்கு மேதையும், ஸத்ஸங்கமும் கிடைக்கவே, நீ நாஸ்திக வாதங்களால் சலிக்கப்படமாட்டாய்.

உனது ஸம்ஸர்க்கம் உன்னை இவ்வண்ணம் ஆக்கியது, அவனுடைய ஸம்வர்க்கம் அவனை அவ்வண்ணம் போக்கியது'', என்று சொன்னார் கேசவாசார்யர்.

"அப்பா! காவ்ய க்ரந்தங்கள் தான் அடியேனுக்குத் தேவரீர் கற்பிக்கின்றீர். தத்வவிஷயங்கள் வாசிக்காமல், கேள்வியால் மாத்ரம் ஈஷத் அறிகின்றேன். அவற்றுள் நிஷ்க்ருஷ்டார்த்தங்களைத் தேவரீர் அடியேனுக்கு க்ரந்தங்கள் மூலமாகத் தெளிவிக்கக் கூடாதோ?'' என்றனள் ஜநகநந்தினி.

"குழந்தாய்! அதத்குத் தகுந்த காலத்தை ப்ரதீக்ஷித்துக் கொண்டிருக்கின்றேன்'' என்று சொல்லிவிட்டுக், கேசவாசார்யர் எழுந்து ஸந்நிதிக்குச் சென்றார். ஸூர்யாஸ்தமநம் ஆன பிறகு பேரருளாளன் ஸந்நிதி வீதியில் எழுந்தருளிவிட்டார். அந்த வீதியில் தன்னுடைய க்ரஹத்தின் முன்பாகத் தன் தாயுடன் ஜநகநந்தினி நின்றுகொண்டு எம்பெருமானுடைய உத்ஸவ வைபவத்தைத் தர்சித்தனள்.

முதலில் ஆனை, குதிரை, வாத்ய விசேஷங்கள், அவள் முன் வீதியைக் கடந்தன. இவற்றின் முன்பும், பின்பும், பகுத்தறிவற்ற பாமரஜநங்கள் கூட்டம் கூட்டமாய்ச் சென்றனர். அவற்றின் பின்னால், அவ்யக்தமான கோஷத்துடன் அத்யாபக கோஷ்டிகள் சென்றன. அவற்றிற்கு ரக்ஷகராகப் பல போலீஸ் உத்யோகஸ்தர்களும் ஓர் கோஷ்டிபோலச் சென்றார்கள். சிறிய திருவடிமீது ஸேவை ஸாதிக்கும் எம்பெருமான், அந்தத் திருவடியின் ஸந்நிதிப் புறத்தே எழுந்தருளுமுன், அத்யாபகர் பெருமாள் முன்பாக எதிர் நின்று, ஆழ்வார் பாசுரங்களைச் சக்தியுள்ள வரையில் உரக்கப் பாடி நிறுத்தும் பர்யந்தம், போலீஸார் அதிகாரத்துக்குப் பயந்த வாஹநம் சுமப்போர், கடற்கரையில் அலைகள் கரைமேல் மோதிப் பின்னிடுவதைப்போல், வாஹநம் சுமக்கும் வருத்தம் தாளாமல் முன்னும் பின்னுமாக நடைகொண்டு நின்றிருந்தார்கள்.

இப்படி அத்யாபக கைங்கர்யத்தை நின்று கடாக்ஷித்த எம்பெருமான், அது முடிவுற்றவுடன், அவ்விடம் விளம்பித்த காலத்தை, அதன் பின்னால் தான் நடக்கும் வேகத்தால் ஸமமாக்க எண்ணுபவன்போல், அதி சீக்கிரமாகச் செட்டிவீதியைக் கடந்தான். இதையெல்லாம் ஜநகநந்தினி நோக்கி நின்றனள் அத்யபாக

கோஷ்டியின் பின்னும், எம்பெருமான் முன்பாகவும், தமது குஞ்சி யழகும், கொடுந்தானைக் கோட்டழகும், மஞ்சளழகும், மற்றோர் பார்க்க வேண்டுமென்று ஆவல்கொண்ட ஆடவர்கள், வாய்பற்ற வெற்றிலை பாக்கை மென்றுகொண்டு, ஒருவர்க்கொருவர் கைகளைப் பற்றிக்கொண்டு, உல்லாஸமாய் வார்த்தையாடிச் சிரித்துக் கொண்டு நடந்தார்கள்.

இவர்பின் பெருமாள் எழுந்தருளினார். முன்னடந்தவரைப் போல் தமைப் பிறர் நினைத்தலை வேண்டாத மற்றோர், அவரைப் போல் ஆடை முதலானவற்றை அணிந்தாராயினும், தேப்பெருமாள்பின் கூட்டங் கூட்டமாகச் சென்றனர். இவர் கூட்டத்தால் விதியில்லாமல் பின்னிட்ட வேதகோஷ்டிகள் வருவதைப் பெண்மணி கண்டாள். அவற்றின் மத்யே, தனது பிதாவையும் தர்ஶித்தாள். வேதத்தின் மதுர ஸ்வரங்களை ஆநந்தத்துடன் கேட்டு அநுபவித்தனள். இதற்குள், அந்தக் கோஷ்டிகளின் பின்னால் அநுயாத்ரை செய்யும் ஸ்ரீவைஷ்ணவர்களையும் கண்டனள். இப்படி ஸர்வேஶ்வரன் உத்ஸவம் கண்டருளின போதிலும், அதில் ப்ரத்யக்ஷமாகத் தெரிகின்ற குற்றங்களை அவள் கண்டாளில்லை. தன் ஜநகனால் தனக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்ட ஸ்ரீபாகவத ஶ்லோகங்களை அவள் அநுஸந்தித்துக் கொண்டிருந்தாள். அவை யாவன :—

ஸ வை கிலாயம் புருஷ: புராதநோ ய ஏக ஆஸீதவிஶேஷ ஆத்மநி । அக்ரே குணேப்யோ ஜகதாத்மநீஶ்வரே நிமீலிதாத்மந்நிஶி ஸுப்தஶக்திஷு ॥ ஸ ஏவ பூயோ நிஜவீர்யசோதிதாம் ஸ்வஜீவமாயாம் ப்ரக்ருதிம் ஸிஸ்ருக்ஷதீம் । அநாமரூபாத்மநி ரூபநாமநீ விதித்ஸமாநோऽநுஸஸார ஶாஸ்த்ரக்ருத் ॥ ஸ வா அயம் யத்பதமத்ர ஸூரயோ ஜிதேந்த்ரியா நிர்ஜிதமாதரிஶ்வந: । பஶ்யந்தி பக்த்யுத்கலிதாமலாத்மநா நந்வேஷ ஸத்த்வம் பரிமார்ஷ்டுமர்ஹதி ॥ ஸ வா அயம் ஸக்யநுகீதஸத்கதோ வேதேஷு குஹ்யேஷு ச குஹ்யவாதிபி: । ய ஏக ஈஶோ ஜகதாத்மலீலயா ஸ்ருஜத்யவத்யத்தி ந தத்ர ஸஜ்ஜதே ॥ யதா ஹ்யதர்மேண தமோதியோ ந்ருபா ஜீவந்தி தத்ரைஷ ஹி ஸத்த்வத: கில । பகம்

[illegible] ॥ இவற்றின் பொருள் :—

"ஸத்வாதி குணங்களுடைய வைஷம்யத்தால் உண்டாகும் மஹத் அஹங்காரம் முதலானவற்றின் உத்பத்திக்கு முன்னால், நாமரூப விபாகமற்றதும், ஸூக்ஷ்ம தசையுடன் கூடியதுமான ஜகத்துக்கு ஆதாரபூதனான ஈச்வரன், ப்ரக்ருதி, ஜீவன், கர்மம், எனப்பட்ட அவனுடைய ஸகல சக்திகளும் தூங்கும் வண்ணம் இருக்க, யோகநித்ராவசனாய் நிற்கும் ப்ரளயமாகும் இரவில், சிதசித்ரூபமான அவனது சரீரம் நிஷ்ப்ரபஞ்ச தசையாகும் ஸூக்ஷ்மாவஸ்தையுடன் நிற்கையில், அவன் ஒருவனே இருந்தனன் என ச்ருதிகளால் உத்கோஷிக்கப்பட்ட, அந்தப் புராதந புருஷனன்றோ இந்த ஸ்ரீக்ருஷ்ணன். அவன்தான், மறுபடியும், நாமரூப ரஹிதங்களான ஜீவன்களுக்கு நாமரூபாதிகளை அவற்றிற்குக் காண களேபர ப்ரதாநத்தால் செய்ய இச்சித்தவனாய்க் கொண்டு, தனது வீர்யத்தால் ப்ரேரிதமானதும், அவனம்சபூதனான ஜீவனை மோஹிக்கச் செய்வதும், ஸ்ருஷ்டிக்கு அபிமுகமா யிருக்கப்பட்டதுமான ப்ரக்ருதியை, ஸ்ருஷ்டி நிமித்தம் அதிஷ்டாநம் செய்தது மன்றி, அந்த ஜீவன்களுக்குக் கார்

யாகார்ய நிச்சயத்தின் பொருட்டு சாஸ்த்ரத்தையும் அநுக்ர ஹித் தளித்தனன். ஜிதேந்த்ரியர்களும், யோகிகளும், நித்யஸூரி களும் நிரந்தரமான பக்தியுடன் கூடிய புத்தியினுல் எவனு டைய பரமபதத்தை ஸாக்ஷாத்கரிக்கின்ருர்களோ, அந்த நாரா யணன் தான் இந்த ஸ்ரீக்ருஷ்ணன். ஆதலால், அவன் தூரம் சென்று அவனைப்பற்றி நமக்குண்டான ஜ்ஞாநத்தைப் போக்க டிக்கத் தகான். ஓ, ஸகி! யாதொரு ஈசன் ஒருவனே கேவலம் லீலைக்காக ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டித்து, காத்துத் தனக்குள் அடக்குகின்ருனென்றும், அந்த ஜகத்வ்யாபாரத்தில் ஸங்கமற்று மிருக்கின்ருன் என்றும், வேதங்களிலும், உபநிஷத்துகளிலும், ப்ரஹ்மஸ்வரூப ரஹஸ்யங்களைச் சொல்லுபவர்களாலும், நிரந்தர மாகப் பாடப்பட்ட திவ்ய சரித்ரங்களுடன் கூடினவனே, அவன் தான் இவன். எக்காலங்களில் தமோகுண வ்யாப்தமான புத்தி யுடன் கூடின மன்னர்கள் அதர்ம கார்யங்களைச் செய்துகொண்டு ஜீவிக்கின்றனரோ, யுகந்தோறும் அக்காலங்களில், இந்த ஸ்ரீக்ரு ஷ்ணனே, ஜகத்தின் ரக்ஷணத்தின்பொருட்டு, அவதார ரூபங் களை ஸ்வீகரித்தவனுய்க்கொண்டு, தர்மத்தையும், ஜ்ஞாநம் முத லான தனது கல்யாண குணங்களையும், ஸத்யப்ரதிஜ்ஞையையும், ஸச்சரித்ரத்தையும், பக்தாநுகம்பையையும், அத்புத கீர்த்தியை யும் ப்ரகடநம் செய்கின்ருன். எந்தக் காரணங்களால் கேட்பவர்க்கு ப்ரியமான கீர்த்திபொருந்திய இந்தப் புருஷோத்தமன், தனது அவதாரத்தாலும், திருவடித் தாமரைகளின் விந்யாஸத்தாலும், ஸத்காரம் செய்தானே, அந்தக் காரணங்களால் யதுவம்சம் ஸர்வ ச்லாக்ய மாயிற்றென்பது என்ன ஆச்சர்யம்? மதுரைக் கிருப்பிடமான மதுவநமும் மிகவும் புண்ய ப்ரதேச மாயிற்றென் பது மஹதாச்சர்யம்! இன்னும் அத்யாச்சர்யம்! த்வாரகையா னது பூமிக்குப் புண்யமான யசஸ்ஸை உண்டுபண்ணிக்கொண்டு, ஸ்வர்க்கத்தின் யசஸ்ஸைத் திரஸ்காரம் செய்கின்றதென்பது. ஏனெனில், அந்நகரவாஸிகள் ப்ரதிதிநமும் அநுக்ரஹத்துடன் செலுத்தப்பட்ட ஸ்மித பூர்வாவலோகநத்தை யுடைய தம்மு டைய நாதனுன ஸ்ரீக்ருஷ்ணனைப் பார்க்கின்ருர்கள். வ்ருத விசே ஷங்களாலும், புண்ய ஸ்நாநங்களாலும், ஹோம விசேஷங்களா லும் இந்த ஈச்வரன், அவன் திருவடிகளை ஆச்ரயித்த பத்நீ மார்களால் ஜந்மாந்தரங்களில் நன்கு ஆராதிக்கப்பட்டான் என்

பது திண்ணம். ஏனெனில், ஓ ஸகிகளே! எவனிடம் பற்றிய மநஸ்கராய்க் கோபகந்நிகைகள் ஸம்மோஹம் அடைந்தனரோ, அவனுடைய அதராம்ருதத்தை அடிக்கடி அவர்கள் பாநம் செய்கின்றனரன்றோ? ஸத்கர்மாநுஷ்டாந மற்றதும், ஸதாசார வர்ஜிதமானதுமான ஸ்த்ரீ ஜந்மத்தையும், இந்த ஸ்ரீக்ருஷ்ணபத்நீகள் மிகவும் சோபநமாகச் செய்தார்களன்றோ? ஏனென்றால், அந்த ஸ்த்ரீகள் க்ரஹங்களினின்று, அவர்கள் நாதனான புண்டரீகாக்ஷன், அவர்களுக்குப் பாரிஜாதம் முதலான ப்ரிய வஸ்துக்களைக் கொண்டு தந்து, ஆநந்தத்தை யுண்டுபண்ணிக்கொண்டு, ஒருபோதும் வெளிப்படாமல் நிற்கின்றான்.'' இவ்விதம் சொல்லிக் கொண்டிருந்த ஹஸ்திநாபுர ஸ்த்ரீகளுடைய விசித்ர வார்த்தைகளைத் தனது புன்னகையுடன் கூடிய கடாக்ஷத்தால் அநுக்ரஹித்துக்கொண்டு ஸ்ரீஹரிঃ புறப்பட்டுப் போனார். இவ்விதமாகத் தேவாதிராஜனை, மத்துறு மிகுத்த தயிர் மொய்த்தவெண்ணெய் வைத்தனுமத்தனென்று, ஜநகநந்தினி அநுஸந்தித்துக் கொண்டிருக்கையில் பெருமாள் எழுந்தருளிவிட்டார். ஜநகநந்தினியும் தன் தாயுடன் இல்லத்துக்குள் சென்று உரிய தொழில்களைச் செய்து கொண்டிருந்தாள்.

அவளை அன்று கண்டு பேசிய ஸ்ரீநிவாஸன் எனும் சிறுவன் சென்னைமாநகரத்தில் கலாஸங்க மத்யம பரிக்ஷையில் தேறி, பி. ஏ. எனப்பட்ட உத்தம பரிக்ஷைக்காகக் கலாசாலை யொன்றில் படித்துக் கொண்டிருந்தான். அவன் நடாதூர் அம்மாள் திருவம்சத்தில் பிறந்து, வைதிகர் எனப்பட்ட மாதாபிதாக்களை அடைந்தவன். அவன் தாய், கேசவாசார்யர் ஸஹோதரி யானபடியால், பந்துத்வ ப்ரயுக்தமான பரிசயத்துடன் ஜநகநந்தினியுடன் ஸம்பாஷித்தனன். அந்யாத்ருசமான அவளுடைய புத்தியாலும், அவளுடைய ஸௌந்தர விக்ரஹத்தாலும் ஆகர்ஷிக்கப்பட்ட சித்தத்துடன் கூடினவனாய், அவனுடைய தாய்தந்தையர் அவன் விவாஹத்தைப்பற்றி அந்யத்ர எவ்விடத்தில் யோசித்தபோதிலும், அந்த யோசனைக்குக் கொஞ்சமும் இடம் கொடாமல், தன் மனோபாவத்தையும், அன்று வரையில் அவர்க்கும் தெரிவிக்காமல் இருந்தான். அநுராகத்தால் தன் மாதுலன் மகளை அன்று தர்சிக்க வந்தவன், நன்றாக யோசிக்காமல அவள் மநஸுக்குத் தாபத்தை யீந்த நிமித்தம் வருத்தப்பட்டான். இனித்

தனது மனோரதத்தை வெளிவிடாவிட்டால், அது கார்யத்தில் முடியமாட்டா தென்று நிச்சயித்துத், தன் மாதாபிதாக்களுடன் அதைப்பற்றி ப்ரஸ்தாபிக்கக் கருதினான். தன் மாதுலனிடம் தான் வைத்த கௌரவத்தால், அந்த ப்ரஸ்தாபத்தைத் தானே யவரிடம் செய்தானில்லை. அவரை விட்டுத் தனதில்லம் சென்றவுடன் தன் தாயான கநகவல்லியைக் கண்டு, "அம்மா! நீண்ட காலமாய் என் மநம் கொண்ட ரஹஸ்யத்தை உன்னிடம் சொல்லுகின்றேன். அப்பாவுடன் யோசித்து அதை நிறைவேற்றத் தக்க ப்ரயத்நத்தை நீ செய்தல் நலம். இவ்வாறன்றி, நீங்கள் எனக்கு விவாஹமென் றொன்றை முடித்தல் முடியமாட்டாது. எந்தப் பெண்ணைப்பற்றி நீங்கள் என்னிடம் சொன்னாலும் பயனில்லை. எனக்கு மனையாள் வேண்டுமென்று நீங்கள் நினைத்தீராகில், ஜநகநந்தினியை அதனிமித்தம் கொள்ளல் வேண்டும். அது உங்கட்கு ஸாத்யமாகாவிட்டால் உங்களுடைய வம்சம் என்னால் வ்ருத்தியாகாதென்பதை அறிந்து கொள்வீர்கள்" என்று சொல்லிவிட்டு வெளியே போய்விட்டான். பெருமாள் எழுந்தருளிவிட்டபடியால், அவன் பிதா வரதாசார்யரும் வேதபாராயண கைங்கர்யம் செய்ய ஸந்நிதிக்குப் போய்விட்டார். கனகவல்லியும் தான் கொஞ்சமும் எதிர்பார்க்காத வண்ணம் புத்ரனுடைய வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டாள். தன்னுடைய தமையன் அதற்கிணங்கமாட்டாரென்று பயந்தாள். அவரிணங்காவிட்டால், தன் புத்ரனுடைய பிடிவாதத்தை நினைக்கவும் பயந்தாள். நின்றவிடத்திலே நின்று, சிறிது காலம் யோசனையில் ஆழ்ந்து இருந்தாள். பிறகு தன் புருஷனுடன் விஷயத்தை ப்ரஸ்தாபிக்க நிச்சயித்துக்கொண்டு, வீட்டுவேலைகளைப் பார்க்கச் சென்றனள்.

அன்றிரவு உத்ஸவாநந்தரம் வரதாசார்யர் அகத்துக்குவந்து சேர்ந்தனர். அப்போது அவர் பார்யை தன்னுடைய மகன் சொன்ன விஷயத்தை அவரிடம் மொழிந்தனள். அதைக்கேட்டு வரதாசார்யர் ஸந்தோஷித்தாரில்லை. "அது ஸாத்ய விஷயமன்றே. ஸாதாரண ஜநங்கள் அந்த ரூபமான ஸம்பந்தங்கள் செய்துகொள்கின்றனர். வ்யபதிஷ்டர்கள் அவ்வண்ணம் செய்யமாட்டார்களே. பையனோ பிடிவாதம் செய்கின்றானே. நாளைக்குக் காலையில் நாமிருவரும் உன் தமயனைப் போய்ப் பார்ப்போம். பகவத் ஸங்கல்பம் இந்த ப்ரயத்நத்துக்கு அநுகூலமாக விருக்குமென்று தோன்றவில்லை" என்று அவர் சொன்னார்.

பத்ராதிபர்.

# வர்த்தமானம்.

**வரதக்ஷிணை வாங்கவாவது கொடுக்கவாவது கூடாதென்று பரோடா ஸமஸ்தானத்தில் ஒரு சட்டம்:**—பரோடா மகாராஜா அவர்கள் தன்னுடைய ராஜ்யத்தில் வரதக்ஷிணை வாங்கவாவது கொடுக்கவாவது கூடாதென்று தன்னுடைய ராஜாங்கத்திலுள்ள சட்டநிர்மாணசபையில் சட்டம் ஏற்படுத்துவதற்காக ஒருமசோதா சட்டம் கொண்டுவந்திருக்கிறார்களாம்.

* * * * * *

**இராமேசுவரம் தேவஸ்தானத்தின் ஆதரவில் பிரஸங்கங்கள்:**—நாளது ஆனந்த ஞு ஆடி உத்ஸவகாலத்தில் ஹிந்து மதஸம்பந்தமான சில உபந்யாஸங்கள் நடந்தன. பல ஜனங்கள் கேட்டுத் திருப்தி அடைந்தார்கள். அதுபோலவே மாசி பிரஹ்மோத்ஸவத்திலும் அருமையான உபந்யாஸங்க்ள் நடைபெறும்படி தேவஸ்தானத்தில் எறபாடு செய்திருக்கிறார்கள். இந்தப் பிரகாரமே ஒவ்வொரு பெரிய தேவஸ்தானங்களிலும் ஒவ்வொரு உத்ஸவத்திலும் நடப்பித்தால் அளவற்ற நன்மை யுண்டாகும்.

* * * * * *

**அமெரிக்காவில் தபால் கொண்டுபோக ஆகாசக்கப்பல்கள்:**— ஒரு தேசத்திலிருந்து மற்றதேசங்களுக்கும், ஒரேதேசத்தில் ஒரு பட்டணத்திலிருந்து மற்ற பட்டணங்களுக்கும் தபால்கள் இன்னும் சீக்கிரமாகவும் சுலபமாகவும் போகவர ஏற்பாடு செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் அமெரிக்கா தேசத்தில் ஆகாசக்கப்பல்கள் வழியே தபால் அனுப்புகிறதென்று தீர்மானித்து இரண்டாயிரம் ஆகாச கப்பலோட்டிகளைத் தயார் செய்திருக்கிறார்களாம்.

* * * * * *

**சென்னைப்பட்டணத்தில் மணலிஹாஸ்டல் என்ற ஒரு வித்தியார்த்தி கிருஹம்:**—ஈஸ்ட் இந்தியா கம்பெனியாருடைய நாளில் மதராஸில் பெருத்த வியாபாரம் செய்துவந்த சரவணமுதலியார் என்னும் பிரபு பிரதிதினமும் என்றென்றைக்கும் நூறு பிராமணர்களுக்கு அன்னம் போடுவதற்காகவென்று சில சொத்துக்களைவிட்டு ஒரு தர்மத்தை ஏற்படுத்தி நடத்திவந்தார். இப்போது அவருடைய வம்சஸ்தர்களாயும். படித்த்வர்களாயும், ஐசுவரியவான்களாயும் இருக்கும். மகா-ா-ா-ஸ்ரீ சரவண முதலியார் அவர்களும் கிருஷ்ணசாமி முதலியார் அவர்களும், வித்தியா தர்மத்தின் அருமையையும் பெருமையையும் தெரிந்து அந்தத்தர்மத்தை மாற்றி உயர்ந்த படிப்பு படிக்கும் பிள்ளைகளில் 100 பேருக்கு இனமாக இருக்க இடமும் கொடுத்து சாப்பாடுபோட்டு உதவி செய்வதாக

மணலிஹாஸ்டல் என்னும் ஒரு இடம் ஏற்பாடு செய்து அதில் அந்த பிள்ளைகளுடைய உபயோகத்துக்காக ஒரு புஸ்தகசாலையும் ஸ்தாபித்து சிலவருஷங்களாக நடத்திவருகிறார்களாம். அதில் படித்து M. A., B, A., முதலான பெரிய பரீக்ஷைகளில் தேறினவர்கள் அனேகம் பேர்கள் உயர்ந்த உத்தியோகங்களில் இருக்கிறார்களாம். அடிக்கடி அந்த கனவான்கள் இருவரும் அந்த ஹாஸ்டலுக்குப்போய் கவனித்து அந்தப் பிள்ளைகளுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்து தங்களுடைய சொந்த குழந்தைகளைப்போல அன்புபாராட்டுகிறார்களாம். கலாசாலைகளிலுள்ள ஒவ்வொரு இடங்களிலும் இவ்விதமான தர்மங்கள் ஏற்படுமோனால் முன்னுக்கு வரக்கூடிய புத்திசாலிகளான ஏழைப்பிள்ளைகள் எவ்வளவு பேருக்கு உபகாரமாயிருக்கும்.

* * * * * *

• பம்பாயில் அநாத வித்தியார்த்தி கிருஹங்கள்:—பெரிய பட்டணங்களில் ஆதரிப்பாரற்ற அனேகம் சிறுவர்கள் துஷ்டர்களுடைய வசத்தில் அகப்பட்டு துன்மார்க்கங்களில் அமைந்து தாங்களுங் கெட்டுப் பிறருக்கும் தீங்கை விளைவித்து வருகிறார்கள். அவர்களுடைய நயத்தைக் கருதியும் ஜனஸமூஹத்தினுடைய நயத்தைக் கருதியும் அப்படிப்பட்ட சிறுவர்களை ஆதரித்துப் படிப்பித்து நல்வழிப்படுத்தவேண்டியது அவசியம். பம்பாயில் சில தேசாபிமானிகள் அநாத வித்யார்த்தி கிருஹங்களை ஏற்படுத்தி அவைகளில் அவ்விதமான சிறுவர்களுக்கு இடம்கொடுத்து அவர்களைப் போஷிக்கவும் படிப்பிக்கவும் அவசியமான பொருளைச் சம்பாதித்து அவர்களை அன்புடன் ஆதரித்து நல்வழிப்படுத்துவதையே தங்களுடைய வேலையாக ஏற்றுக்கொண்டு நடத்திவருகிறார்களாம். குழந்தைகளின் ரக்ஷணார்த்தம் என்ற ஒரு ஸங்கம் சிலவருஷங்களுக்குமுன் அவ்விதமான நோக்கங்களுடன் சென்னைப் பட்டணத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் அதற்குத் தேவையான பொருளுதவி இல்லாதபடியாலும் அதை வஹித்து நடத்துவதற்கு வேண்டிய உத்ஸாகமுள்ளவர்கள் கிடைக்காதபடியாலும் இதுவரை அதனுடைய நோக்கங்கள் சிறிதும் நிறைவேற வில்லை. அந்த ஸங்கத்தின் 7-வது வருஷ மஹோத்ஸவம் சென்ற பிப்ரவரி 6உ நடந்தேறியது. மதராஸ் கவர்னரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். அனேக கனவான்கள் வந்திருந்தார்கள். ஒவ்வொருவரும் தன்னால் இயன்றமட்டும் பொருளுதவிசெய்து அந்த ஸங்கத்தை ஆதரித்து அந்ததர்மத்தைப்பரிபாலனம் செய்யவேண்டும் என்று கவர்னரவர்கள் வற்புறுத்திச் சொன்னார்கள். உடனே நெல்லூர் ஜில்லா முதுக்கூர் என்னும் கிராமத்திலுள்ள வெங்கம்மாள் என்பவர்கள் சகல செலவும்போக வருஷம் 1-க்கு ரூ 300-க்குக் குறையாமல் வரும்படி வரக்கூடிய 10 - ஏக்கர் நஞ்சை நிலங்களை அந்த ஸங்கத்துக்கு நன்கொடையாக அளித்தார்களாம். இனி அந்த ஸங்கத்தின் காரியங்கள் நன்றாய் நடைபெறும் என்று நம்புகிறோம்.

* * * * * *